விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | தை 29 சனிக்கிழமை (11.02.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 54

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# ஜெனீவா நேரடிப் பேச்சின்போது முஸ்லிம் பிரதிநிதியும் பங்கேற்பு!

## தகுதியானவரை நியமிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதற்கு தகுதிவாய்ந்த பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கும் நோக்கில் சகல முஸ்லிம் அரசியல் கட்சிகளிடமும் ஜனாதிபதி இவ் வேண்டுகோளை விடுத்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் விவசாயி மீது அம்பாறையில் சூடு

(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்றில் முஸ்லிம் விவசாயி ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. தனது வீட்டிலிருந்து வயலுக்கு சென்றுகொண்டிருந்த போது வீதியில் எதிர்கொண்ட இருவர் தன்னைதுப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அவர் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் அம்பாறை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் டபிள்யு, (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பத் தகராற்றில் மனைவி வெட்டிக் கொலை

(கல்வியங்காடு)

குடும்பத் தகராறு காரணமாக குடும்பப் பெண் ஒருவர் கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இக் கோரச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் திரு நெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக ஆத்திர முற்ற கணவன், மனைவியை கோடரியால் வெட்டிக்கொலை செய்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த சிவசீலன் ஜெய்சுதா (வயது 28) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே வெட்டிக்கொலை செய்ய்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதிநந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரணவிசாரணைகளின் பொருட்டு சடலத்தை யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார் இதேவேளை (12 ஆம் பக்கம் பார்க்க)



மன்னாரிலிருந்து தமிழகத்திற்கு சென்ற ஈழ அகதிகள் நேற்று தனுஷ்கோடியைச் சென்றடைந்த போது....

## ஜெனீவாப்பேச்சில் முஸ்லிம் பிரதிநிதி

தனுஷ்கோடியைச் சென்றடைந்த போது....

# ஜெனீவாப்பேச்சில் முஸ்லிம் பிரதிநிதி யப்பான் அரசாங்கம் வரவேற்பு

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதி களும் கலந்து கொள்வதற்கு தாங்கள் முழு ஆதரவு தெரிவிப்பதாகவும் அதனை வர வேற்பதாகவும் யப்பான் தூதுவர் அக்கியோ சூடா தெரிவித்துள்ளார்.

தன்னைச் சந்தித்த அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் அவர் இதைத் தெரிவித்துள்ளார். அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.சயிட் மற்றும் அதன் தவிசாளர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் நேற்று முன்தினம் யப்பானிய தூதுவரைச் சந்தித்தபோது இக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். முஸ்லிம் மக்கள் எதிர் நோக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நபிகள் நாயகத்தை சித்திரித்து டென்மார்க் பத்திரிகை ஒன்றில் கேலிச் சித்திரம் பிரசுரிக்கப்பட்டதைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

பகல் ஜும் ஆத் தொழுகையின் பின்னர் நாட்டின் சில பகுதிகளில் முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் நடத்தியுள்ளனர்.

கொழும்பு , மருதானை, புத்தளம், காத்தான்குடி, சம்பாந்துறை ,மருதமுனை உட்பட பல பகுதிகளில் இவ் ஆர்ப்பாட்டமும் கண்டனப் பேரணியும் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கண்டனப் கோஷங்களை எழுப்பியதுடன் சுலோகங்களைத் தாங்கியிருந்தனர்.

(ச-4)

# திட்டமிடல் செயலகத்தினருடன் என்.ஜி.ஓ.பிரதிநிதிகள் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தினருக்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை புலிக்ளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பில் விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனீவாப் பேச்சுக்களின் போது யுத்த அச்சுறுத்தலை தடுக்கும் வகையில் சாதகமான தீர்மானம் எடுக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் உருவாகியுள்ள யுத்த அச்சுறுத்தலைத் தடுக்கும் வகையில் ஜெனீவாப்பேச்சுக்களில் சாதகமான முடிபுகளை எடுக்கவேண்டுமென்பதை வலியுறுத்தும் தீர்மானத்தை அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியுள்ளது.

ஜனநாயக காங்கிரஸ் உறுப்பினர் பிராங்க் பலொன் இந்தத்தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளார். இலங்கையில் மீண்டும் ஆயுதப்போராட்டத்தை தடுக்கும் வகையில் ஜெனீவாவில் நடைபெறும் பேச்சுக்களில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் கேட்டுக் கொள்கின்றோம் என அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ஆசியாவின்

(12 ஆம் பக்கம் பார்க்க)





EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ எயார்


வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறப்பு நிறைந்த தைப்பூசம்

சைவத் தமிழ் மக்களின் இனிய திரு நாட்களில் தைப்பூசம் மிகவும் சிறப்புப் பெற்றது. இந்து மக்கள் தமது இல்லங்கள், ஆலயங்கள் தோறும் இப்பூசநாளில் புனிதம் பேணுவர். 'தை பிறந்தால் வழி



பிறக்கும்' என்பது எமது நம்பிக்கை. ஏனெனில் தை மாதம் உழவருக்குரிய மாதம் இந்த உழவரின் உழைப்பு பலன் பெறும் மாதம் என்றும் கூறலாம். உழுதவன் உண்டு களிப்புறும் மாதமாக அவனின் நெல்மணிகள் பூத் துக் குலுங்கிக் காய்த்துப் பழுத்து பதர் நீக்கி பக்குவப்படுத்தி வீட்டுக்குக் கொண்டு வந்து விழா எடுக்கும் நாளாகவும் இத்தைப்பூச நாள் விளங்குகிறது. பன்னிரு இராசிகளில் கர்க்கடக இராசியில் அங்கம் வகிக்கும் இப்பூச நட்சத்திரம் புராண இதிகாசங்களில் போற்றப்படுவதையும் நாம் காணலாம்.

இந்துக்கள் தைப்பூசநாளில் புதிர் எடுத்தல், புதிர் உண்ணல் என்ற நடைமுறைகளைப் பின்பற்றுவர். பழையன கழிதலும் புதியன புகுத்தலும் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் நாளாகவும் இப்பூச நாள் விளங்குகின்றது. உழவனின் வியர்வைத் துளிகள்நெல் மணிகளாக வெளிக்கொணர்ந்து அவன் வெற்றிக்களிப்புடன் வீட்டிற்கு ஒரு பிடி கதிரை அறுத்து வந்து சுவாமிக்குப் படைத்து விழா எடுப்பதும் இந்நாளிலேயாகும். அந்த நெல்லைக்கொண்டு அமுது படைத்து ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து இன்புறும் நாளாகவும் இத்தைப் பூசநாள் விளங்குகிறது.

கிழக்கு மாகாணத்திலும் பல கிராமங்களிலும் புதிது உண்ணல் என்று இத்தினம் அழைக்கப்படுகின்றது. சம்பந்தர் போன்ற நால்வர் பெருமக்களால் பாடப்பட்ட புனித நாள் இத்தைப்பூசநாள் 'தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்' என்று திருஞான சம்பந்தர் பாடுவதிலிருந்து இத்தினத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளலாம்.

மகரமாதமாகிய தைமாதம் தமிழர்களுக்கு விசேட மாதமாக அமைவது போல் சிங்கள மக்களுக்கும் புனிதமாதமாகத் திகழ்கின்றது. புத்தபகவான் ஞானோதயம் பெற்று விளங்கியமையும் இந்நாளிலேயாகும். ஞானிகளின் கர்வத்தை அடியோடு அடக்கி ஞானம் கொடுத்ததும் இப்பூச நாளிலே ஆகும். தில்லை மூவாயிருவருக்கும் இரணிய வர்மனுக்கும் தில்லையில் நடராசப் பெருமான் தரிசனம் கொடுத்ததும் தைப்பூசத் திருநாளிலாகும்.

தைப்பூசமானது வியாழக் கிழமையும் சித்தயோகமும் பூரணையும் கூடிவரப்பெற்றால் அதைவிடப் பொன்னாள் இல்லையென்றே கூறலாம். சைவமக்கள் தாம் வாழும் இடமெங்கும் இப்பூச நாளைப் பெருவிழாவாகக் கொண்டாடுவர்.

மகாவிஷ்ணு மோகினியாகவும் சிவபிரான் பிச்சாடனர் கோலமாகவும் தாருகாவனத்தின்கண் சென்று அங்குள்ள முனிவர்களின் கர்வத்தை அடக்க எடுத்த கூத்தை விஷ்ணு மூர்த்தி ஆதிசேடனுக்கு உரைத்தார். இதனைக் கேட்ட ஆதிவிசேட மூர்த்தி தானும் அக்கூத்தைக் காணவிரும்பிகையிலைக்குச் சென்று தவம் அனுஷ்டித்தார். இதே கூத்தைக் காண விரும்பிய வியாக்கிரபாத முனிவரும் சிதம்பரத்தில் தவமிருந்தார். சிவபெருபெருமான் ஆதிசேடன் முன் தோன்றி 'அப்பனே தில்லைக்கு வருவாயானால் நம்திருக்கூத்தை உனக்கும் வியாக்கிரபாத முனிவருக்கும் ஆடிக்காட்டுவோம்' என்றுரைத்தார்.

இப்படியாக இருவருக்கும் நடனமாடிக்காட்டிய சிறப்பு வாய்ந்த நன்னாளே இத்தைப் பூசத்திரு நாள். இதனாலேயே சிவனின் நடனக் கோலத்தை உணர்த்தவே ஆலயங்களில் பிச்சாடனர் உற்சவம் நடைபெறுகிறது. சிவனின் இத்திருத் தாண்டவத்தால் வையகமே நடுங்கிற்று . இவ்வுலகம் முழுவதும் இந்நடனத்தால் அயர்ந்துள்ளமையை உணர்ந்து நடனத்தை நிறுத்த யாவரும் துதி செய்து வணங்கி நின்றனர்.

இப்புனிததினத்தில் இந்துக்களாகிய நாம் ஆலயங்கள் தோறும் வீடுகள் தோறும் புனிதம் பேணி நடப்போமாக தீபங்களை ஏற்றி

**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

உழவர் திருநாளாகவும் திருத்தாண்டவ நாளாகவும் சிவனை நினைத்து அபிஷேக ஆராதனைகள் செய்து போற்றுவோமாக. நாம் செய்த பாவ வினைகளை அகற்றி நல்வினை செய்து கொள்ள வழிசமைப்போமாக.

நன்றி- அருள்ஒளி

## நூல் வெளியீட்டு விழா

செல்வி சுபாஷினி ஜெகநாதனின் 'பகிர்வு' கவிதை நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் கவிஞர் திருமதி சுதாகரன் வாசுகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

வெளியீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் நூல் மதிப்பீட்டுரையை சைவ வித்தியா விருத்திச்சங்க நிதிச் செயலாளர் கலாநிதி மனேன்மணி சண்முகதாஸும் வழங்கவுள்ளனர். (கு-51)

## வைத்தியர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை திடீர் சோதனைக் குழுவினரினால் கண்டுபிடிக்கப்பட்ட வைத்தியர்கள் வடக்கு-கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

கடந்த இரண்டு மாதகாலத்தில் கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளில் கடமையாற்றிய 18வைத்தியர்கள் திடீர் பரிசோதனைக்குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் வைத்திய நிபுணர் ஒருவரும் அடங்குவார். இவர்களுக்கு குற்றப்பத்திரிகை கையளிக்கும் முன்னர் உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் வடக்கு-கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இந்த 18வைத்தியர்களில் ஒருவர் பரிசோதனைக் குழுவினரை தாக்கிய குற்றச்சாட்டுக்காக தற்காலிக வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இரத்தினபுரி பகுதியிலுள்ள வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் ஒருவர் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக கூறி தனக்கு சொந்தமான மருந்தகத்தில் மருந்து விற்பனை செய்து வந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (கு-9)

## இராசிபலன்

**11.02.2006**
**(தை 29, சனிக்கிழமை)**
**திரயோதசி காலை 7.17**
**பூசம் முழுவதும்**
**இராகுகாலம் 09.37-11.04மணிவரை**
**சுபநேரம் 3-34-5.04 மணிவரை**
**தைப்பூசம்**

| | |
|---|---|
| மேடம் | தெய்வசிந்தை, புதிய விடயம், முயற்சி தாமதம், மனச்சஞ்சலம். |
| இடபம் | சகோதரர் உதவி, தெய்வ தரிசனம், பிரயாண நன்மை, நல்ல செய்தி. |
| மிதுனம் | எடுத்தகாரியம்தாமதமாகும், கற்பனை மிகுதி, கடினவார்த்தை , அதிக செலவு. |
| கடகம் | பிரயாணம், தெய்வசிந்தை, விருந்துபசாரம், பெரியோர் சந்திப்பு. |
| சிங்கம் | தொழில்நன்மை, வாக்குமேன்மை, சயனசுகக்குறைவு, பிரயாணம். |
| கன்னி | தெய்வசிந்தை, தொழில்சிந்தை, பெருமையடைதல், முயற்சி கைகூடும். |
| துலாம் | அதிகாரம், கடினமுயற்சி, நல்லசெய்தி, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, தந்தைவழி உறவு, வீண் பயம், முயற்சிதாமதம். |
| தனுசு | உடல்நலக்குறைவு, தொழில் சிந்தை, காரிய தாமதம், சுபகீர்த்தி. |
| மகரம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| கும்பம் | கீர்த்தி, அதிகாரம், போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | மனச்சஞ்சலம், பணவிரயம், வேலைச் சுமை, காரிய தடங்கல். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## தொடர்ந்து பணிப்புறக்கணிப்பு

**நோயாளர்கள் பெரும் அவதி**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்த வேலை நிறுத்தம் போராட்டத்தின் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று அரச வைத்திய சாலையின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்காமையினால் இரத்தினபுரி மாட்டவத்திற்குள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி வைத்தியசாலை யின் நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை, வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவும் மூடப்பட்டுள்ளதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## திருமலையில் மீன்பிடித்தடை; 15000 குடும்பங்கள் பாதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்படையினர் விதித்துள்ள கடல் வலய தடைச்சட்டம் காரணமாக 15ஆயிரம் மீனவ குடும்பங்கள் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளன. இவர்களில் தமிழ் பேசும் மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக துறைமுகத்தை அண்டிய பகுதியிலும், உட்துறைமுக பகுதியிலும் மீன் பிடித்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் திருகோணமலை நகரத்தில் துறைமுக உட்பரப்பில் மீன் பிடித்தொழிலை மேற்கொண்டு வரும் 150 குடும்பங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் கட்டுவலைமூலம் தொழில் செய்தவர்களை கடற்படையினர் உபகரணங்கள் முற்றாக கடல் ஓரத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என கடுமையான சட்டத்தையும் பிரயோகித்துள்ளனர். இதனால் அவர்கள் தமது உபகரணங்களை நெருக்கடி மிகுந்த தமது வீடுகளில் வைத்து பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் கடந்த செவ்வாய்கிழமை பிற்பகல் இத்துறைமுக பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு புதிதாக மீன்பிடியை மேற்கொள்ள கடற்படையினர் அனுமதி வழங்கியதோடு அவர் அதனை திறம்பட செய்வதற்கு ஒத்தாசைகளையும் வழங்கியுள்ளனர்.

இதற்கு முன்னர் இத்தடை பிரதேசத்தினுள் கட்டுவலை போட்டனர் என்பதற்காக மூன்று தமிழ் மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தலா 3 ஆயிரம் ரூபா தண்டமும் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(க)

## பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி

ஆபத்தான வேலைகளில் அல்லது வன்முறைச் சம்பவங்களின் போது பாதுகாப்பாக செய்தி சேகரித்தல் தொடர்பாக வடபகுதி பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று இம் மாதம் 15, 16ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

சர்வதேச செய்திப் பாதுகாப்பு பயிற்சி நிறுவனமும், முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பேர் கொவ் நிறுவனமும், இணைந்து இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

களப்பணிகளின் போது பாதிக்கப்பட்டால் அல்லது காயமடைந்தால் மேற்கொள்ளவேண்டிய உடனடி முதலுதவிகள் அவசர ஆபத்தான வேளைகளில் எவ்வாறுசெயற்படுத்தல், செய்தியாளர்களின் சுய பாதுகாப்பு, கடத்தல்சம்பவங்களின் போதான செயற்பாடுகள், வாகனங்களில் செல்லும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், வெடிபொருட்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறையில் களச் செய்தியாளர்கள், ஊடகப்படப்பிடிப்பாளர்கள், சுத்திர ஊட கவியலாளர்கள் ஆகியோர் பங்கேற்றவுள்ளமைஇங்குகுறிப்பிடத்தக்கது. (கு-7)

## ஜெனீவா பேச்சுவார்த்தை நல்ல திருப்பமாக அமையும்

**ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே நம்பிக்கை**

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் நடத்தும் பேச்சுக்கள் நல்லதொரு திருப்பமாக இருக்குமென்று வர்த்தகத்துறையமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த நேர்காணலில் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளினால் இரண்டு பொலிஸார் கைதாகி இருக்கின்றார்கள்.

ஜெனீவா பேச்சுக்களுக்கு முன்பாக அவர்கள் விடுதலை செய்யப்படக்கூடும்என்றநம்பிக்கை எமக்கு இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளும் சிலரை விடுதலை செய்யக்கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தற்போது நடைபெறவுள்ளது அமைதிப் பேச்சுக்கள் அல்ல. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முதல் முயற்சி அதன் பின்னர் அமைதிப் பேச்சுக்களுக்கு செல்ல விருப்பதாக தெரிவித்த அவர் நம்பிக்கையை முதலில் கட்டியெழுப்ப வேண்டும் என்றார்.

இரு தரப்பினரும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் இருந்தால், இந்தப் பேச்சுக்கள் வெற்றியடையும் என்று குறிப்பிட்ட அமைச்சர் தாக்குதல்கள், படுகொலைகள் நடத்தப்பட்டிருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபாட்டோடு இருப்பார்கள் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கருணாகுழுவின் ஆயுதக்களைவு பற்றி புலிகள் பேசினால் அவர்களும் யுத்த நிறுத்தத்தை செயற்படுத்த வேண்டும் பேச்சுக்கலிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் விலகினாலும் தாம் ஒரு போதும் போருக்கு திரும்பப் போவதில்லை. இது 100 வீதம் உறுதி என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

# தான் விரித்த வலைக்குள் தானே சிக்கினார் மஹிந்த! ஜெனீவா மாநாட்டில் சொல்லப்போவது என்ன?

தென்னிலங்கை ஆட்சியாளர்களான ஜே.வி. பி, ஹெல உறுமய மற்றும் சுதந்திரக் கட்சி கூட்டணியினர் தமிழ் மக்களை எந்த முறையில் அணுக வேண்டும் என்பதை சில வாரங்களுக்கு முன்புவரை திட்டமிட்ட ஒரு முன்மொழிவாக வைத்திருந்தனர். அதனையே ஜனாதிபதி தேர்தல் பிரசாரப் பொருளாகவும் கூட கொண்டு சென்றிருந்தனர் . ஆனால் தமிழ் மக்



களையோவிடுதலைப்புலிகளையோ அவர்கள்நினைத்த கோணத்தில் நெருங்கவோ அணுகவோ முடியாது என்பதை இப் போதாவது அவர்கள் உணர் ந்திருப்பார்கள்.

இதனை ஜே.வி.பி, ஹெல உறுமய போன்றன விளங்கிக் கொண்டனவோ இல்லையோ மகிந்தராஜபக்ஷ மிகத்தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கின் றார். தமிழர் தரப்பை எவ்வாறு அணுகலாம் என்று மஹிந்த போட்ட கணக்குக்கு மாறாக தமிழர் தரப்பு அவரை எவ்வாறு அணுக வேண்டும் என்று தீர்மானித்துச் செயற்படுகின்றது.

தனது வெற்றிக்குபின்னால் நின்ற சிங்களக் கடும் போக் காளர்களின் வழிகாட்டலில் அவர்களைத் திருப்திப்படுத்தும் விதமாக மஹிந்த இராணுவ கட்டமைப்புக்களில் சில மாற்றங்களை மேற்கொண்டார். இராணு வத்தளபதி, இராணுவப் புலனாய்வு தளபதி போன்றோர்களின் புதிய நியமனங்கள் தமிழர்த ரப்புக்கு காட்டப்பட்ட சமிக்ஞை என்பதில் ஐயமில்லை .

சமிஞ்ஞைகளோடு மட்டும் நின்றுவிடாமல் அவர்கள் நடைமுறைப்படுத்திய படையியல் செயற்பாடுகளும் மோசமானவை யதார்த்தத்துக்கு வெகுதூரத்தில் நின்றுகொண்டு தமிழ் மக்களை அச்சுறுத்தி பணிய வைக்கும் தந்திரோபாயத்தை கையாளத் தலைப்பட்டதன் விளைவை அவர்கள் அனுபவி த்தார்கள்

அதேநேரம் சர்வதேச ரீதியாக உதவி பெற்று புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்று நம்பிய மஹிந்தவை இந்தியா உள்ளிட்ட நாடுகளும் கைவிட்டன. மஹிந்த சூடியிருந்த எதிர்நிலைப்பாடுகள் எவையோ அவற்றையே அவர் ஏற்றுக்கொண்டு நடக்க வேண்டும் என அவை அழுத்தம் கொடுத்தன.

குறிப்பாக நோர்வேயை அனுசரணையாளர்களாக கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதுதான் மஹிந்த செய்யவேண்டிய காரியம் என்பதை அவர்கள் உறுதிபட வெளிக்காட்டினர். இது தமிழர் தரப்புக்கு முரண்பாடில்லாததாக அமைந்தவேளை ஐரோப்பிய நாடுகளை மைய மாககொண்டே பேச்சுக்களை நடத்தவேண்டும் என்றவிடுதலைப்புலிகளின் விருப்பத்தை மதிப்பதாகவும் இருந்தது.

இந்த சாதகமான அம்சங்கள் தான் கடந்த வாரம் தேசியத் தலைவர் நோர்வே சமாதானத் தூதுவரும் அபிவிருத்தி அமைச்சருமான எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்தபோது ஜெனீவாவில் பேச்சுக்களை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்க காரணமாக அமைந்தது. இந்தப் பேச்சுக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையை செம் மையாக அமுல்ப்படுத்துவது ப்ற்றியதாகவே அமையவுள்ளன. இந்தப் புரிந்துணர்வு உடன் படிக்கை ஒற்றையாட்சிக்கும் அரசியல் யாப்புக்கும் முரணாக இருப்பதாகவும் அதை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இப்பொழுது அவரே மிகப்பெரிய முரண்பாட்டின் வடிவமாக அதனை எவ்வாறு முழுமையாக அமுல்படுத்துவது என்று பேசுவதற்கு இணங்க வேண்டிய இராஜதந்திர சிக்கலுக்குள் அகப்பட்டிருக்கின்றார்.

அவர் பதவிக்கு வந்ததும் வடக்கு-கிழக்கில் எந்தெந்த இராணுவக் கெடுபிடிகளை ஆரம்பித்து வைத்தாரோ அவற்றையெல்லாம் முடிவுக்குக்கொண்டு வந்தால் தான் பேசமுடியும் என்ற ஒரு நிபந்தனையையும் ஏற்றுக் கொண்டு அமுல்செய்ய வேண் டியவராக இருக்கின்றார். அவ்வாறு செய்தாலே ஜெனீவா பேச்சுக்களுக்கு சாத்தியம் இருக்கும் என்ற மிகக் கடுமையான யதார்த்தம் அவருக்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இதைவைத்து தென்னிலங்கை தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு போரைத் தொடங்கும் முனைப்பில் இருந்து விலகிவிட்டதாக கருதமுடியாது. மானசீகமாக அது தமிழர் தரப்பு பலமிழந்து அழிந்து போகவேண்டும் என்ற சிந்தனையில் தான் இருக்கின்றது.

நோர்வே தூதுவர் சந்திப்புக்கு முன்வரை எந்த நேரத்திலும் போர் ஒன்று தொடங்கும் அதை எதிர் கொள்ளவேண்டும் என்ற தயார்ப் படுத்தலிலேயே படைத் தரப்புகள் இருந்திருக்கின்றன. போரொன்றைத் தொடங்க வேண் டும் என்ற முனைப்பில் அதற்கான திட்டங்களிலும் ஈடுபட்டிருக்கின்றன. தைப் பொங்கல் தினத்துக்கு பின் போர் ஒன்று வெடிக்கும் என்று தென்னிலங்கை சிங்கள ஊடகங்களும் அவதானிகளும் எதிர்வு கூறி படைகளை உசார் நிலைக்குட்படுத்தியிருக்கின்றார்கள்.

ஆனால் போரின் மூலம் பிழைப்பு நடத்தும் தென்னிலங்கையின் சில சக்திகள் போரொன்றுக்கான எதிர்பார்ப்புடன் அதிலும் தமிழர் தரப்பின் அழிவை வரவேற்கும் மனப்பாங்குடன் காத்திருக்கின்றன. இதன் வெளிப்பாடாகவே கடந்த வாரத்தில் மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கிளைமோர்த்தாக்குதல் இடம்பெற்ற தாகவும் அதில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சிக்கியதாகவும் செய்தி வெளியிடும் அளவுக்கு குரூரமான கற்பனை வளத்துடன் இருந்தன.

இந்த செய்தியுடன் யுத்தம் ஒன்று வெடிக்கப்போவதாக முடிவெடுத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சிறிலங்காவுக்கு திரும்ப இருந்த முடிவை லண்டன் விமான நிலையத்தில் வைத்து மாற்றிக் கொண்டமையும் தென்னிலங்கை என்ன மனோபாவத்துடன் இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

இப்போது ஜெனீவாவில் பேச்சுக்களை நடத்துவதற்கான தயார்ப் படுத்தலில் சிறிலங்கா அரசு இருக்கின்றது. உண்மையில் ஜெனீவாவில் என்ன பேசப்பட வேண்டும் என்பதும் என்னமுடிவை அரசு கூற வேண்டும். என்பதும் ஏற்கனவே சொல்லப் பட்டுவிட்டன.

புரிந்துணர்வு உடன்படிக்கையை இருதரப்பும் செம்மையான முறையில் அமுல்படுத்துவது என்பது தான் பேச்சின் கருப் பொருள். குறிப்பாக இலங்கை அரசும் படைகளும் உடன்படிக்கையின்படி உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து வெளியேறி மக்களின் இயல்பு வாழ்வுக்கு வழி சமைத்தல், ஒட்டுப்படைகளினை அகற்றுதல் என்பனவே பிரதான விடயங்கள். இதனை செய்ய முடியுமா இல்லையா என்பதையே இலங்கை ஜெனீவாவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் கூற வேண்டும்.

இதற்கு மஹிந்த அரசு தயார் என்றால் எத்தனை நாள்களுக் குள் செய்து முடிக்கும் என்பதையும் திட்டவட்டமாக தெரிவிக்க

**இணையப்பார்வை**

வேண்டியிருக்கும் என்றே எதிர் பார்க்கப்படுகின்றது.

முன்னைய பேச்சுக்களில் இழுத்தடித்த வரலாற்றை இந்த பேச்சுக்களிலும் இலங்கை அரசு தொடர முடியாது.

## முன்பள்ளி கையளிப்பு





என்.ஆர்.சி.நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட முன்பள்ளி கட்டட திறப்பு விழாவும் கையளிக்கும் நிகழ்வும் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசர ணையுடன் நேற்று முன்தினம் காலை 10.00 மணியவில் விஜிதபுர கிராமத்து முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் திருமதி வி.நித்தியபிரபா தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் மதகுரு ஜெயசுமணராம விகாறஸ்தபூஜ மங்கள கிரி விஜிதபுர பொலிஸ் அதகாரி பிரதிப்றங்க திருக்கோணமலை மாவட்ட, தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிப் பணிப்பாளர் சி.குமரகுருபரன், மாவட்ட திட்டப்பணிப்பாளர் வே.கலைவர்ணன் ஆகியோரும் பிரதம விருந்தினராக கலந்துகெண்டு சிறப்பித்தனர். மற்றும் மீனவ சங் கத் தலைவர் ஆனந்தபீரிஸ், சர்வோதய தலைவி குசுமலதா முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய சிங்கள இணைப்பாளர் ஜெனட், மற்றும் வலய பிரதேச இணைப்பாளர்களும் மற்றும் அப்பிரதேச மக்களும், முன்பள்ளி சிறார்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அத்தோடு முன்பள்ளி சிறார்களுக்கான பரிசுப்பொருட்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டது. (து)

# யுத்த நிறுத்த விதிகளின் சீரான நடைமுறை குறித்தே பேச்சு

ஜெனீவா பேச்சுவார்த்தையில் தமிழர் தாயக்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களையுமாறும் கேட்கப்படும் என விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்ரர் மேற்கு நாட்டு ஊடகர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு கைச் சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள அடிப்படை விதிகளிலேயே விடுதலைப்புலிகள் இந்த கோரிக்கையை வலி யுறுத்துவார்கள் என்றும் தயா மாஸ்ரர் கூறினார்.

விடுதலைப்புலிகள் தொடர்ந்து கூறிவரும் போர் நிறுத்த விதிகளின் சீரான நடைமுறை குறித்து மட்டுமே ஜெனீவாவில் பேசப் படும். அர சாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பங்களிப்பு அவசியம்இல்லை என்றும் அரசாங்க குழுவில் முஸ்லிம்கள் அங்கம் வகிப்பதில் விடுதலைப்புலிகளுக்கு ஆட்சேபம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித் தார்: (து)









நேற்றுக்காலை யாழ்.மெக்கோஸ்ட் கட்டர் சுப்பர் மாக்கெற் தொகுதியை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாடாவை வெட்டி வைபவ ரீதியாகத் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும், நிறுவன உரிமையாளரின் பெற்றோர் மங்கள விளக்கேற்றுவதையும், வைபவத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதையும் அடுத்தடுத்த படங்களிலும் காணலாம். (படங்கள் :- திலீவின்பன்)

# இன்று ஒரு தகவல்

## நல்லாசிரியர்

என்னுடன் படித்த ஒருவர் இப்போது ஒரு பள்ளிக் கூடத்தில் ஆசிரியராக இருக்கிறார். பிள்ளைகளிடையே அவருக்கு நல்ல பெயர். எந்த மாணவனைக் கூப்பிட்டுக் கேட்டாலும் "எங்கள் ஆசிரியர் மிகவும் நல்லவர் சார்" என்று தான் சொல்வான். இந்தக் காலத்துப் பிள்ளைகளிடம் எப்படி அவரால் நல்ல பெயர் வாங்க முடிந்தது? எனக்குப் பெரிய ஆச்சரியம்.

ஒருநாள் அவரே எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். என்னுடைய சந்தேகத்தை அவரிடமே நேரடியாகக் கேட்டுவிட்டேன். "எல்லா பிள்ளைகளும் ஒட்டுமொத்தமாக உங்களை மிகவும் நல்ல ஆசிரியர் என்று ஒத்துக்கொள்கிறானே... அது எப்படி?" என்று கேட்டேன். "அது ஒரு பெரிய ரகசியம்" என்றார் அவர். "அது என்னவென்று என்னிடம் சொல்லக் கூடாதா?" என்றேன். "சொன்னால்... நீங்கள் எல்லோரிடமும் சொல்லி விடுவீர்களே" என்றார். "சொன்னால்... என்ன எல்லோருக்கும் அது பிரயோசனப்படுமே" என்றேன்.

அவர் கொஞ்சம் யோசித்தார். "ம்...சரி. நான் அந்த ரகசியத்தைச் சொல்லவேண்டும் என்றால் நீங்கள் இன்று எனக்கென்று ஏதாவது ஒரு தகவல் சொல்ல வேண்டும்" என்றார். "ஓ...பேஷாக" என்று கூற ஆரம்பித்தேன்.

நல்லாசிரியருக்கு எடுத்துக்காட்டாக ஒரு பெரியவர் சொன்ன உண்மைக்கதை இது. "ஒரு ஊரில் ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் ஒருநாள் வகுப்பில் பாடம் நடத்தி முடித் தார். முடித்ததும் பிள்ளைகள் எல்லோருக்கும் வீட்டுப் பாடம் கொடுத்தார். எல்லோரும் நாளை வகுப்புக்கு வரும் போது இதனைச் செய்துகொண்டு வாருங்கள்" என்றார். அவர் சொன்ன மாதிரியே மறுநாள் வகுப்புக்கு வரும் போது எல்லோரும் அந்தப் பாடத்தை செய்துமுடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

ஒரே ஒரு மாணவன் மட்டும் அதைச் செய்துகொண்டு வரவில்லை."ஏன் செய்து கொண்டுவரவில்லை" என்று கேட்டார் ஆசிரியர். "என்னால் முடியவில்லை அதுதான் செய்து கொண்டுவரவில்லை" என்று கூறினான். அந்த மாணவன். வாத்தியார் உடனே அந்த மாணவனைப் பார்த்து "போய் ஒரு பிரம்பை எடுத்துக்கொண்டு வா" என்றார். அவன் பயந்துகொண்டே போய் ஒரு பிரம்பை எடுத்துக்கொண்டு வந்து வாத்தியாரிடம் கொடுத்தான். அந்த ஆசிரியர் பிரம்பை வாங்கி அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டுச் சொன்னார் "நான் எல்லா மாணவர்களுக்கும் சரியாகக் கவனித்துச் சொல்லிக் கொடுத்தி ருக்கிறேன். ஆனால் உன்னை மட்டும் சரியாகக் கவனிக் காமல் விட்டிருக்கிறேன். அதனால் தவறு என் மீதுதான். இந்தப் பிரம்பினால் என் கையில் இரண்டு அடிகொடு" என்றார்.

மாணவன் பயந்துபோய் "நான் எப்படி உங்களை அடிக்க முடியும்?" என்றான். ஆசிரியர் விடவில்லை. "நீ அப்படி செய்யாவிட்டால் நான் செய்த தவறு எப்படி உன் ஞாபகத்தில் இருக்கும்? இரண்டு அடி கொடு" என்றார். கையை நீட்டினார். அந்தப் பையனைக் கட்டாயப்படுத்தி அடியை வாங்கிக்கொண்டார். அந்தப் பையன் உடனே அந்த ஆசிரியரின் காலில் விழுந்து அழுது "என்னை மன்னித்து விடுங்கள்" என்றான். அதன் பின் ஒருநாள் கூட அவன் வீட்டுப் பாடம் செய்யாமல் வகுப்பிற்கு வந்ததே இல்லை.

இந்தத் தகவலை என்னிடம் வந்திருந்த ஆசிரியரிடம் கூறிவிட்டு "இப்போது சொல்லுங்கள். உங்கள் ரகசியத்தை. மாணவர்கள் எல்லோரிடமும் எப்படி நல்ல பெயர் வாங்கினீர்கள்?" என்று கேட்டேன். அவர் மெதுவாக வாயைத் திறந்தார். "அது வந்து... சார் பொதுவாக ஆசிரியர்கள் கேள்வி கேட்டு மாணவர்கள் பதில் சொல்வார்கள் அல்லவா பதில் சரியாக இல்லாவிட்டால் ஆசிரியருக்குக் கோபம் வரும். கேள்விக்குத் தகுந்த பதிலாக இருக்க வேண்டும். ஆனால் நான் பதிலுக்குத் தகுந்த கேள்வியாக கேட்பேன் சார்" என்றார்.எனக்குப் புரியவில்லை. "அது எப்படி?" என்றேன்.

அவர் விளக்கினார். "என் வகுப்பில் ஒரு மாணவன் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் தெரியாது. தெரியாது என்றே சொல்லிக் கொண்டிருப்பான் சார். ஒருநாள் திடீரென்று மேலதிகாரி எங்கள் வகுப்புக்கு வந்துவிட்டார். அவர் சிலரைச் சுட்டிக்காட்டி "அவர்களிடமே கேளுங்கள்" என்று என்னிடம் சொல்லிவிட்டார். அவர் சுட்டிக்காட்டிய மாணவர்களில் இவனும் ஒருவன். இவன் முழித்துக்கொண்டே எழுந்துநின்றான். எதைக் கேட்டாலும் தெரியாது என்றே சொல்லப் போகிறான். மேலதிகாரி வேறு பக்கத்தில் நிற்கிறார். என்ன செய்வது. நான் யோசித்தேன்.

ஒருகேள்வி கேட்டேன் அவனிடம். "தெரியும் என்பதற்கு எதிர்ப்பதம் என்ன?" என்று கேட்டேன். 'தெரியாது' என்றான். மேலதிகாரி 'சரி' என்றார். இருந்தாலும் அவரது மனதிற்குள் இலேசாக ஒரு சந்தேகம். என்னைப் பார்த்து "அவனிடமே இன்னொரு கேள்வி கேளுங்கள்" என்றார்.

நான் யோசித்தேன். "ஆந்தைக்குப் பகலில் கண் தெரியுமா?" என்று கேட்டேன். அவன் உடனே 'தெரியாது' என்றான். மேலதிகாரி 'வெரிகுட்' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அதிலிருந்து எல்லாப் பிள்ளைகளுக்கும் என்மீது ஒரு தனி மரியாதை சார்" என்று விளக்கம் கொடுத்தார் அந்த ஆசிரியர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கும்

## அந் நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னெடுக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிப்பதற்கு பூரண ஆதரவினை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லான்ஸ்டெட் நேற்று முன்தினம் காலை சுகாதார மற்றும்போஷாக்கு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையின் போது அரசாங்கம் பின்பற் றவிருக்கும் நடைமுறைகள் தொடர்பாகவும் அமைச்சர் அமெரிக்கத் தூதுவரிடம் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், கடந்த அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும், அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர், அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

சமாதான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பது குறித்து ஜனாதிபதியின் அர்ப்பணிப்பு மற்றும் அவரால் கடைப்பிடிக்கப்படும் பொறுமை என்பவற்றைத் தமது அரசாங்கம் மதிப்பதாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்ததாக சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# தாக்குதல் நடத்தியவரின் வங்கிக்கணக்கு முடக்கம்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள வர்த்தகர்களின் வீடுகள் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்திய குழுவின் தலைவரின் வங்கிக் கணக்கு மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியனின் உத்தரவால் முடக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள வர்த்தகர்களிடம் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழு கப்பம் கேட்டுள்ளது. கப்பம் செலுத்தாத வர்த்தகர்களின் வீடுகள் மீது இந்தக் குழுவினால் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தபட்டுள்ளன.

இந்தக் குழுவின் தலைவர் அம்பாறையைச் சேர்ந்தவராவார். இவரைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் பொலிஸாருக்கு கிடைத்து இவரைக் கைது செய்வதற்காகச் சென்றபோது அவர் அப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

வவுனியாவிலுள்ள வர்த்தகர்களினால் இவரின் வங்கிக் கணக்கில் பல மில்லியன் ரூபா வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைக் கும்பலின் தலைவனால் வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் வர்த்தகர்கள் தொடர்புகொண்டு உரையாடியுள்ளமையும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்தக் கும்பலின் பின்னால் வேறு எவரும் உள்ளனரா என்பது பற்றி விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றார்.

மேலும் வவுனியாவிலுள்ள வர்த்தகர்கள் கப்பம் கேட்போரின் வங்கிக்கணக்குகளில் பணம் வைப்பீடு செய்வதனைத் தவிர்க்குமாறும் நீதிபதி கேட்டுள்ளார். (கு)

# கைக்குண்டு மீட்பு

(வவுனியா)

வவுனியா நகர மத்தியில் நேற்று முன்தினம் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா மக்கள் வங்கிக்கு முன்பாக இனந்தெரியாத நபர்களினால் போடப்பட்டிருந்த இந்தக் கைக்குண்டானது முச்சக்கரவண்டி சாரதி ஒருவரினால் இனம் காணப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் குண்டு செயலிழக்கும் பிரிவினர் இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோரின் துணையுடன் இந்தக் குண்டு மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டு சீனத் தயாரிப்பு எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (த-9)

# கலந்துரையாடல்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவுள்ள 2006 ஆம் ஆண்டுக்கான கழக விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் கழகங்களுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 15ஆம் திகதி காலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்துக் கழக அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறும், இதுவரை விண்ணப்பிக்காத விளையாட்டுக் கழகங்களும் விண்ணப்பிக்கலா மெனவும் மேலதிக விபரங்களுக்கு செயலக விளையாட்டு உத்தியோகத்தருடன் தொடர்ந்த கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-132,133)

# காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 2ஆம்திகதி வியாழக்கிழமை கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற குருநகரைச் சேர்ந்த 20 வயதான இராசகுமார் செந்தில்குமார் வீடு திரும்பவில்லையென அவரது பெற்றோர் அவரைக் காணவில்லை என்று கடந்த 6 ஆம்திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (து-132,133)

# நடமாடும் சேவையும் சட்ட உதவியும்

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ்-கியூடெக் நிறுவன மனித உரிமைப் பிரிவும், நோர்வே அகதிகள் பேரவையும் இணைந்து நடாத்தும் நடமாடும் சேவையும் சட்ட உதவியும் எனும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணியிலிருந்து மாலை 3மணி வரை மட்டுவில் றோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், விவாகப் பதிவுச்சான்றிதழ், காணி உறுதி தொடர்பாக பிரச்சினைகளுக்கும், மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சினைகளுக்கும் உரிய அதிகாரிகள் விளக்கமளிப்பார்கள்.

இப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய மட்டுவில், கல்வயல், கிராம்புவில், சரசாலை, நுணாவில் ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து பயன் பெறுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள். (து-132,133)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தல்

# மனிதாபிமானப் பணிகளுக்கான பேரவை கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்டமை தொடர்பாக மனிதாபிமான பணிகளுக்கான நிறுவனங்களின் பேரவை கவலை தெரிவித்துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் கடத்தப்பட்டுள்ளமை கவலைஅளிக்கிறது.வடபகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் டெனிஸ் அமைப்பின் 2 பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

மனிதாபிமானப் பணிகள் மற்றும் மீளமைப்புப் பணிகளில் ஈடுபடுவோர் மீதான இத்தகைய தாக்குதல்களினால் போரினாலும் ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுவோர் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுமானால் அனைத்து இன மக்களுமே பாதிக்கப்படுபவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## 10 வருடத்திற்கு மேல் பணிபுரியும்

# வரி அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைகளத்தில் பத்து வருடத்துக்கு மேலாக கடமைபுரியும் வரி அதிகாரிகளுக்கு பதவியுயர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். இங்கு நிலவும் சிக்கல்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி வெளிவாரிப் பட்டதாரிகளையும் வரி அதிகாரிகளாகச் சேர்த்துக் கொள்ளும்படி கூறினார்.

தொழிற்சங்கங்கள் தமது சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது, பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகளை முன்னெடுக் குமாறும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். (த-7)

# ஜனாதிபதித் தேர்தல் நடைமுறையையே உள்ளூராட்சித் தேர்தலுக்கும் பின்பற்றவேண்டும்

## ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறைகளையே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலும் வடக்கு கிழக்கில் செயற்படுத்த வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கடந்த வாரம் நடத்திய ஆலோசனையின் போது இந்தக் கருத்தை தமது கட்சி வலியுறுத்தியதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசந்த வரணசிங்க தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் நிருவாகப் பகுதி வாக்காளர்களுக்காக கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைக்கவேண்டும். வாக்காளர் அடையாள அட்டைகளைப் பரிசோதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நடைமுறைகளை மீளவும் தாங்கள் வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார்.

மேலும் வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு உரிய பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ஷவிடம் தமது கட்சி வலியுறுத்தியதாக ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

வடக்கு கிழக்கில் பல கட்சி ஜனநாயகத்தைக் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் இது என்றும் தமது கட்சி சுட்டிக்காட்டியதாக ஜாதிக ஹெல உறுமயவினர் தெரிவித்தனர்.

அரசாங்கம் தனக்குக் கிடைத்திருக்கும் அருமையான வாய்ப்பை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் ஹமாசின் பாதையைப் பின்பற்றி விடுதலைப்புலிகள் தேர்தலில் பங்கேற்க சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசந்த வரணசிங்க தெரிவித்தார். (து)

## அரச ஊழியர்களுக்கு வீடுகள்

(கொழும்பு)

வீடுகளற்ற அரச ஊழியர்களுக்கு புதிய வீடுகளை பெற்றுக்கொடுக்கும் செயற்திட்டமொன்றை பொதுநிர்வாக அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டம் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும், முதற்கட்டமாக 25 ஆயிரம் அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க விருப்பதாகவும் பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட பதவி அடிப்படையில் தவணை கொடுப்பனவு முறையின் கீழ் இந்த வீடுகள் வழங்கப்படவுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் முதற்கட்ட வீடமைப்பு திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் வீடுகள் அரசாங்க ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

# குழந்தை இலக்கியம் வளர்ந்த வரலாறு

"குழந்தை இலக்கியம் தமிழ்மொழியிலே வளர்ந்து வந்த வரலாற்றைப் பல்வேறு வகைகளிலே பார்க்கலாம். அந்த நாளிலே நாகராசன் தொடக்கம் கல்வயல் குமாரசாமி, சத்தியசீலன், ஆடலிறை நடராசன் போன்றவர்கள் வரை குழந்தைக் கவிதைகளை எழுதினார்கள். குழந்தைப் பாடல்களை அழகான படங்களுடன் சேர்த்துத் தருவதன் மூலம் அவை குழந்தைகளுக்கு நல்ல விளக்கத்தைக் கொடுக்கும்".

இவ்வாறு கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் ஆதீனத்தில் நடைபெற்ற 'ஆடலிறை குழந்தைப் பாடல்கள்' நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்த யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையப் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

விழாவின் ஆரம்பத்தில் புலவர் ம.பார்வதிநாதசிவம், மூதறிஞர் வரதர் சொற்செல்வர் ஆறுதிருமுருகன், கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் மங்கல விளக்கேற்றினர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் சிறப்புரையாற்றி முதற்பிரதியையும் சிறப்புப் பிரதியையும் வழங்கினார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கவிஞர் சோ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராசா மதிப்புரை ஆற்றினர்.

நூலாசிரியர் மயிலங்கூடலூர் பி.நடராசன் ஏற்புரையும் நன்றியுரையும் வழங்கினார். (து)

# ஹக்கீமுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராகவும், கட்சிக்கு எதிராகவும், நஸீர் அஹமட் என்பவரால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் மர்ஹும் எம்.எச்.எம். அஷ்ரபினால் கட்சிக்கென கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் ஒன்றை நஸீர் அஹமட் என்பவர் தனது கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம் ஒன்றின் பெயருக்கு மாற்றி எழுதிக் கொண்டதாகக் குற்றஞ்சாட்டி, ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் அவரை கட்சியில் இருந்து இடைநிறுத்தியது.

கட்சியின் இந்த இடைநிறுத்தல் முடிவிற்கு எதிராக நஸீர் அஹமட் தாக்கல் செய்த வழக்கே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# போராட்டம் விஸ்தரிப்பு

அரச வைத்திய அதிகாரிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை களுத்துறை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைக்கு அரச தரப்பிலிருந்து திருப்திகரமான பதில் ஏதும் கிடைக்கவில்லை என்று சங்கத்தின் பிரதான செயலாளர் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான சுற்றறிக்கையை அமுல்படுத்த வேண்டுமென அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 6ஆம் திகதி பதுளை மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சங்க நடவடிக்கை கொழும்பு மாவட்டத்திற்கும் இரத்தினபுரி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்ட போதிலும் சரியான பதில் எதுவும் கிடைக்காமையினால் தற்போது அதனை களுத்துறை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-9)

# பிரேசில் தூதுவராக சாந்த கொட்டேகொட

(கொழும்பு)

பிரேசில் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கான ஒப்புதலை உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றத்தின் நியமனக்குழு விரைவில் அளிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் சாந்த கொட்டேகொட பணி நீட்டிப்புப் பெற்றிருந்தார். நவம்பர் 17தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற மஹிந்த ராஜபக்ஷ இராணுவத்தினரது ஓய்வு வயது நீட்டிப்பு உத்தரவை இரத்துச் செய்தார்.

மேலும் சாந்த கொட்டேகொடவை பதவியிலிருந்து விலக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து இராணுவத் தளபதியாக கடும்போக்காளர் சரத் பொன்சேகாவை மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

மேலும் கனடா நாட்டுத் தூதுவராக சந்திரிகாவின் முன்னாள் செயலாளரான டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ண நியமிக்கப்படவுள்ளார். சந்திரானந்த டி சில்வாவை இலங்கை அரசாங்கம் முன்னர் பரிந்துரைத்தது. ஆனால் கனேடிய அரசாங்கம் அந்த நியமனத்தை நிராகரித்தது. பாதுகாப்புத்துறைச் செயலாளராகவும் கருணாரட்ண இருந்தமையால் அவரை கனேடிய அரசு நிராகரிப்பதாகத் தெரிவித்தது.

ஈரானின் தூதுவராக ரூபவாஹினியின் தலைவராக இருந்த எம்.எம்.ஜுகைரை உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றத்தின் நியமனக் குழு அண்மையில் அங்கீகரித்திருந்தது.

இக்குழுவில் பிரதமர் ரட்ணசிறீ விக்கிரமநாயக்க மற்றும் அனைத்து நாடாளுமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம்பெற்றுள்ளனர். (து)

# வறுமை ஒழிப்புத் திட்டத்தை வலுப்படுத்த ஒருங்கிணைப்புக்குழு அமைப்பு

(கொழும்பு)

வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேலைத்திட்டத்தினை வலுப்படுத்தும் நோக்கில் அமைச்சின் செயலாளர்களை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

12 அமைச்சுக்களைச் சேர்ந்த செயலாளர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவின் உதவியுடன் வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக சமுர்த்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கென அரசாங்கம் 4 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதில் சமுர்த்தி கொடுப்பனவுக்கு மாத்திரம் 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, ஏழை மக்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் செறிந்து வாழும் 100 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (க-9)

# இழந்த கல்வியை மீட்டல்

சாவகச்சேரி அறவழி போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் யு.என்.எச்.சி.ஆர். இன் நிதியுதவியுடன் தென்மராட்சியில் இழந்த கல்வியை மீட்டல் என்ற செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக 20 ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்போது உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்ப பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரினால் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி இவர்கள் தமது கற்பித்தலை ஆரம்பிக்கவுள்ளனர். 20 பாடசாலைகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளில் 4ஆம் ஆண்டு மாணவர்களின் எழுத, வாசிக்கும் அடிப்படை கணித திறனை ஊட்டுவதற்காகவே இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

ஏறத்தாள 500 மாணவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-108)

# பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்தினம் ஆரம்பமானதையடுத்து நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறை 18 மாநகர சபைகள், 46 நகரசபைகள் மற்றும் 270 பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 15ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக்கள் தேர்தல் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு எதிர்வரும் 16ஆம் திகதி பகல் 12.00 மணி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்ய அனுமதிக்கப்படும்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் தேர்தல் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வேட்புமனுக்கள் 16ஆம் திகதி கையேற்கப்பட்டதன் பின்னர் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவிருக்கும் திகதி உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்படும் என்று குறிப்பிட்ட அவர் தபால் மூலம் வாக்களிப்பவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் தபால் மூலமான வாக்குப் பதிவுகள் எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த தேர்தல் ஆணையாளர், இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென 75 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 86

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தனது கவிவரிகளால் மக்கள் மனங்களில் வைரமாய் ஜொலிக்கும் கவிப்பேரரசான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 16 ஆம் திகதிகு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 86**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 86

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 84

சரியான விடை





நடிகர் பிரகாஷ்ராஜ்

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 84இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | பி.ராகவி<br>கைதடி தெற்கு,<br>கைதடி. |
| இரண்டாம் பரிசு | :- | து.பிரதீபன்<br>பருத்தித்துறை வீதி,<br>இருபாலை. |
| மூன்றாம் பரிசு | :- | கு.டயந்தன்<br>30/4 சீனிவாசகம் வீதி,<br>கொட்டடி,<br>யாழ்ப்பாணம். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. நா.ஜொஜீபன், சுதுமலை. கி.மைதிலி, பருத்தித்துறை. ஞா.இம்மனுவல், குருநகர். யோ.ரூபன், மானிப்பாய். சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். வ.சிவாஜி, கரணவாய்கிழக்கு. க.அனுஷன், யாழ்ப்பாணம். த.சி.சயந்தன், வட்டுக்கோட்டை. சி.கோவிந்தராஜன், நல்லூர். வே.குமாரசுவாமி, கரவெட்டி. ம.சர்மினி, கோண்டாவில். யோ.கலாறஞ்சினி, சாவகச்சேரி. வி.இளங்கோ, கோப்பாய். L.அபிராமி, வல்வெட்டி. மு.சாந்தினி, புன்னாலைக்கட்டுவன்.

## வழிகாட்டும் கருவி




நீங்கள் படத்தில் பார்ப்பது மொபைல் போன்தான். ஆனால் இதில் இன்னொரு புதுமையான தொழில்நுட்பம் ஒன்றும் புகுத்தப்பட்டுள்ளது. அது என்னவென்றால் நீங்கள் ஒரு இடத்திற்குச் செல்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதற்கான வரை படத்தினை இந்த மொபைல் போனில் புகுத்தி விட வேண்டும். பின் உங்கள் பயணத்தைத் தொடங்கும்போது நீங்கள் சரியான வழிதடத்தில்தான் செல்லுகின்றீர்களா? என்பதைத் தெரிவிக்கும். ஒருவேளை தவறுதலாகச் சென்றுவிட்டால் உங்களிடம் சரியான வழித்தடத்தைத் தெரிவிக்கும். இதற்காக இந்தக் கருவியில் மனித குரல் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருவியை ஜப்பான் நாட்டில் உள்ள முன்னணி செல்போன் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இந்தக் கருவி ஜப்பானில் இன்னும் சில மாதங்களில் கடைகளுக்கு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விபத்தை தவிர்க்க வினோத கார்

விபத்துக்கள் ஓட்டுனர்களின் அஜாக்கிரையால்தான் நடக்கின்றன. இதை அன்றாடம் செய்திகளில் பார்க்கின்றோம். ஓட்டுனர் தூங்கியதால் கார், லொறி மோதல், காரில் பயணம் செய்தவர்கள் பலி என்றெல்லாம் தினந்தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

கார் ஓட்டுபவர்கள் தூங்கிவிடுவார்கள் என்பதற்காகவே சிலர் டிரைவருடன் பேச்சுக்கொடுத்துக் கொண்டே வருவார்கள். கடைசியில் அருகில் இருப்பவரும் தூங்கி விபத்துக்கள் நேர்ந்ததும் உண்டு. சில வாகனங்களில் ஓடியோவில்



பாடல்களைக் கேட்டுக்கொண்டே காரை ஓட்டிக்கொண்டு வருவார்கள். ஆனால் இவையெல்லாம் அவ்வளவாகப் பயன்தருமா என்றால் சந்தேகமே!

தற்போது மோட்டார் நிறுவனம் ஒன்று இவ்வாறான விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவே ஓட்டுபவரின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்கும் வண்ணம் ஒரு புதியவகை காரைத் தயாரித்துள்ளது.

சுவிஸ் கார் நிறுவனம் ஒன்று ஆபத்தைத் தவிர்க்கும் வினோதக் கார் ஒன்றைத் தயாரித்துள்ளது. சென்சோ என்றழைக்கப்படும் இந்தக் கார் ஓட்டுநரின் தன்மையைப் பொறுத்து விபத்தைத் தவிர்க்க எச்சரிக்கை செய்யும். இதை இன்னும் சற்று விரிவாகக் காணலாம். கார் டிரைவர் வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும்போது அவரது ஒவ்வொரு அசைவும் கண்காணிக்கப்படுகின்றது.

அதவாவது விளக்குகள் வண்ண ஒளிகளை உமிழ்தல், ஒலி ஏற்படுத்துதல் மற்றும் வாசனைகளைத் தெளித்தல் மூலம் ஓட்டுநரை எச்சரிக்கை செய்கிறது. கமரா, கைக்கடிகாரம், கொம்பியூட்டர் இவைகளை உள்ளடக்கிய உணரி (சென்சார்) ஒன்று இந்தக் காரில் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கைக்கடிகாரம் ஓட்டுபவரின் நாடித்துடிப்பை கணக்கிடுவதன் மூலம் ஓட்டுபவரின் உடல் நிலையை அறிந்துகொள்கிறது. கமரா ஓட்டுநரின் நடவடிக்கையைக் கண்காணிக்கிறது. கொம்பியூட்டர் ஓட்டுநரின் மன நிலையை அறிகிறது. காரை ஓட்டுபவர் சற்று அயர்ந்தாலோ அல்லது அசதியில் கண்ணை மூட ஆரம்பித்தாலோ உடனே அவருடைய இருக்கை அவரைத் தானாகவே குலுக்கி எழுப்பிவிடும். இதனால் ஆபத்துத் தவிர்க்கப்படுகிறது.

இந்த நவீன கார் விபத்துக்களை தவிர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. இந்தக் காரின் வரவு விபத்தில்லாப் பயணத்தை மேற்கொள்ள உதவும் என்பதில் ஐயமில்லை. இதனைத் தயாரித்த நிறுவனம் காரின் செயல்பாடுகளை சோதித்துப் பார்த்தது. இதில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள் விஞ்ஞானிகளின் நம்பிக்கையை முழுவதுமாகப் பூர்த்தி செய்தன. எனவே வருங்காலத்தில் நிம்மதியான பயணத்தை மேற்கொள்ளலாம்தானே.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-90



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 90**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)கூறுபடுத்தல் - இதனைக் குறிக்கும் (குழம்பியுள்ளது). (4)'இது வெட்ட பூதம் புறப்பட்டது போல' என்றொரு பழமொழி. (5)சூதாட்டத்தில் முடியிழந்த மன்னன் மனைவி. (7)ஒரு புள் (வ.இ). (9)ஊழியம் (வ.இ). (10)'ஆறு இல்லாத ஊருக்கு இது பாழ்' என்பர். (11)இதற்குத் தருமரை உதாரணம் கட்டுவர் (வ.இ).

### மேலிருந்து கீழ்

(1)அழகு - இப்படியுமழைப்பர் (குழம்பியுள்ளது). (2)புத்திரன். (3)'எனக்கு இந்தக் கலர் தான் பிடிக்கும்' என்றொரு பாடல் வரி. (6)பீதி - இதனைக் குறிக்கும் (கீ.மே). (8)பெரும் பாலும் அசைவனவற்றுடன் தொடர்ந்து வரும். (9)அண்மை - எதிர்ச்சொல். (11)துள்ளினமாடு இது சுமக்காது (கீ.மே).

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 88 இன் விடைகள்

#### இடமிருந்து வலம்

1.தியாகம் 4.மேன்மை 5.விளக்கு 6.அல்லி 8.சீதனம் 9.மேதினி

#### மேலிருந்து கீழ்

1.திரவியம் 2.கடுக்காய் 3.அன்றில் 6.அந்தம் 7.விதி

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | R.பூங்காவனம்<br>சரசாலைதெற்கு,<br>சாவகச்சேரி. |
| இரண்டாம் பரிசு | :- | பி.அபிநயா<br>உடுவில் கிழக்கு,<br>சுன்னாகம். |
| மூன்றாம் பரிசு | :- | இ.சண்முகதாஸ்<br>கொத்தியால் ஒழுங்கை,<br>வல்வெட்டித்துறை. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:

வே.குமாரசுவாமி, கரவெட்டி. த.யோகராசா, சாவகச்சேரி. கே.அரசேஸ்வரன், நல்லூர். ம.மைதிலி, கோண்டாவில். திருமதி.P.S.ராணி, சங்கானை. வ.மன்னர் அன்ரனி, குருநகர். சி.யதூசன், மானிப்பாய். பா.இரத்தினேஸ்வரி, சுன்னாகம். கி.மைதிலி, பருத்தித்துறை. ஞா.இம்மனுவல், குருநகர். வ.சிவாஜி, கரணவாய்கிழக்கு.

**அசுத்தங்களுள் மோசமான அசுத்தம் கோபம்தான்.**
*- யாரோ*

**மனிதனுக்கு வரும் பெரும் பான்மையான சங்கடங்களுக்குக் காரணம் அவன் நாக்குத்தான்**
*- ஒரு பெரியவர்.*

# ஹக்ரப் ஹொக்லண்ட் எழிலனுடன் சந்திப்பு



இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

இதன்போது சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து, திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை சந்தித்து தற்போதைய நிலவரங்கள் பற்றி கேட்டறிந்து கொண்டார்.

கடந்த மாதங்களில் திருமலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள், வன்முறைகள் குறித்தும் மற்றும் பல்வேறுபட்ட நிலவரங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் அடுத்தவாரம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது எனத் தெரியவருகின்றது. கடந்த புதன்கிழமை கண்காணிப்புக்குழுத் தலைவர் மட்டக்களப்பிற்கும் விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு பிராந்திய தலைவர்களுடன் பேச்சுகளில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (கு)

## பதிவு செய்க

2006ஆம் ஆண்டு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிக்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், இதுவரை பதிவு செய்யப் படாதிருக்கும் விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் சாவகச்சேரி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் அவருடன் தொடர்புகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-132,133)

## நிர்வாகம் தெரிவு

கரவெட்டி கோட்ட அதிபர் சங்கத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி அதிபர் ச.சிறிராமச்சந்திரனும், செயலாளராக கரணவாய் மகா வித்தியாலய அதிபர் சி.நற்குணலிங்கமும், பெருளாளராக பொலிகண்டி இ.த.க. பாடசாலை அதிபர் க.தர்மகுலசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (து-101)

# ஐ.தே.க.வின் அணியில் ஸ்ரீ.மு.கா இணையும்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு கிழக்குக்கு வெளியே ஐக்கியத் தேசியக் கட்சியின் அணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடும் என்று அக்கட்சிப் பொதுச்செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஹசன் அலி நேற்று முன்தினம் இதுதொடர்பில் கூறுகையில்,

வடக்கு- கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும். வடக்கு- கிழக்கிற்கு வெளியே ஐக்கியத் தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவோம்.

இருப்பினும், இது தொடர்பான முடிவு இறுதிப்படுத்தப்படவில்லை.

வயம்ப மாகாண சபையின் 2 உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் மாறவுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை.

கற்பிட்டி மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த அந்த இரு உறுப்பினர்களும் நிர்வாக விடயங்கள் தொடர்பாகவே வயம்ப மாகாண முதல்வரைச் சந்தித்தனர். அவர்களுடன் தேர்தல் தொடர்பாக முதல்வர் பேசியுள்ளார். இது தொடர்பாக கட்சியின் கவனத்துக்கு வராமல் ஊடகங்களில் அறிக்கையாக வெளிவந்துள்ளது என்றார். (கு)

# அர்ப்பணிக்கும் நிகழ்வு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் யுனிசெப் நிதியுதவியுடன் வைத்தியசாலையின் அபிவிருத்தி மக்கள் பாவனை அர்ப்பணிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட யுனிசெப் நிறுவனத்தின் பொறுப்பதிகாரி யூடித்வுறுனோ, சிறப்பு விருந்தினராக சுகாதார சேவை மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.கேதீஸ்வரன், இளைப்பாறிய கணக்காளர் தணிகாசலம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நீரிழிவு தடுப்பு நிகழ்ச்சித் திட்டமான 'அனைவருக்கும் ஆரோக்கியம்' என்ற நிகழ்ச்சித் திட்டமும் ஆரம்பிக்கப் படும்.

பின்னர் நோயாளர்கள் சகலருக்கும் இரத்த, நீரிழிவு பரிசோதனை இடம்பெறுமென மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (து-52)

# அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் மாவட்ட ரீதியில் பன்முகப்படுத்தப்படும்

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் இதுவரை கொழும்பிலேயே திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாகவும், வெகு விரைவில் இவை மாவட்ட ரீதியில் பன்முகப் படுத்தப்படும் என்றும் அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மாகாண சபைகளுக்கு பாரிய பொறுப்புகள் வழங்கப்படவிருக்கின்றன.

இந்தத் திட்டங்களுக்கு முதல் கட்ட நடவடிக்கையாக அனர்த்த தவிர்ப்பு நிலையங்களுக்குத் தேவையான மனித வளங்களும், பௌதீக வளங்களும் கொடுக்கப்படவிருக்கின்றன.

மனித உரிமைகள் துறைக்கும், சமாதான நட்வடிக்கைகளுக்கும் சமனான பாரிய பொறுப்புகளை முன்னெடுத்துச் செல்லும் பணி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒப்பந்தங்களில் இடம்பெற்றிருக்கும் ஏற்பாடுகளைக் கொண்ட சட்ட மூலங்களைச் சமர்ப்பித்து, இலங்கையிலும், அவற்றைக் கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

சுதந்திர அமைப்பாக செயல்பட்டு வருகின்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தேவையான சகலவிதமான வளங்களும் வழங்கப்படுவதன் மூலம் அதன் நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்படும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்துக்கு எதிராக பொது மக்கள் ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் போதியதாக இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த நிலைமை சம்பந்தமாக எதிர்காலத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பெருமளவு பொறுப்பை ஐ.தே.கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-7)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப் பிரிவில் இடம்பெற்றது.

இதில் விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுங்குமுறைகள் பற்றியும் இவ்விளையாட்டு போட்டியினை மார்ச் மாத காலப்பகுதிக்கு முன்பதாகவே நடாத்தி முடிப்பது பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. (து-132,133)

## திருட்டு

(மருதங்கேணி)

அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் ஓடு பிரிக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த 35ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி பெட்டி திருட்டுப் போயுள்ளது.

இத்திருட்டு சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பருத்தித்துறை பிரதேச சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-35)

# காட்டுப்புலக் கிராமம் புனரமைப்பு

(துன்னாலை)

கரவெட்டி காட்டுப்புல கிராமம் நிக்கொட் திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபா செலவில் சேவாலங்கா நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

பின்தங்கிய கிராமமாக விளங்கிய இக் கிராமத்தில் பொதுமண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதுடன் பொதுக் கிணறுகளும் மலசலகூடங்களும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகள் 35 பேர் தெரிவுசெய்யப்பட்டு சாரதி பயிற்சி, வயரிங் பயிற்சி, தையல் பயிற்சி என்பவுனம் வழங்கப்பட்டு வருவதாக மேற்படி நிறுவன கள இணைப்பாளர் க.திருநீபன் தெரிவித்துள்ளார். (து-101)

# ஜெனீவா பேச்சுக்கு முன்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம்

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களுக்கு முன்பாக அரசாங்கத்தின் சார்பில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி இந்தக் கூட்டத்தை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் ஜெனீவாவில் அரசாங்கத் தரப்பினர் வெளிப்படுத்தவுள்ள பேச்சு விபரங்கள் முன்வைக்கப்படும். அனைத்துக் கட்சியினரது கருத்துகளையும் பரிசீலித்து அதன் பின்னர் அரசாங்கத்தின் நிலைப்பாடு இறுதிப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

# பாடசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிக்கொட் திட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பத்து பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், கனகரத்தினம் மகா வித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி மகாவித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, உரும்பிராய் இந்து தமிழ் கலவன் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஊர்காவற்றுறை சின்னமடு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இப்புனர்நிர்மாணப் பணிகளுக்கென நிக்கொட் திட்டத்தினால் சுமார் 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இப் பாடசாலைகள் இந்த மாதத்தில் பாடசாலை நிர்வாகத்தினிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (து-132,133)

## புதிய அதிபர் நியமனம்

(துன்னாலை)

வடமராட்சி வல்வி வலயத்திலுள்ள கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டவரும், முன்னர் நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் அதிபருமான மகேந்திரனை அவர் பணிபுரிந்த பழைய பாடசாலைக்கே அதிபராக அனுப்பும்படி நாகர்கோவில் மகாவித்தியாலய கல்விச் சமூகம் கல்வித் திணைக்களத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அப்பாடசாலைக்கே திரும்பவும் மாற்றப்பட்டதையடுத்து புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அதிபரான மனுவேல்பிள்ளை மகேஸ்வரராஜா கரணவாய் தாமோதர வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (து-101)

## திடீர் பரிசோதனை

(மருதங்கேணி)

நெல்லியடி பகுதியில் உள்ள கடைகளில் திடீர் பரிசோதனையை மேற்கொண்ட போது பழுதடைந்த ஜெலிகள், யூஸ் வகை கண்டுபிடிக்கப்பட்டு அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டன. (து-35)

## பத்திரிகையாளர்கள் கூட்டம்

புனரமைக்கப்பட்ட யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வதிவோர் வரியிறுப்பாளர் சங்கத்தின் பத்திரிகையாளர் கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு யாழ். பஸ்தியான் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (கு)

# கலைத்தூது அழகியற் கல்லூரி; ஆரம்ப வைபவம் இன்று

(யாழ்ப்பாணம்)

அழகியல் கலைகளின் வளர்ச்சி கருதி திருமறைக் கலாமன்றத்தால் ஆரம்பிக்கப்படும் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு இல 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட இசைத் துறைத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராஜாவும், நடனத்துறை தலைவர் திருமதி கிருஷாந்தி ரவீந்திராவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

அழகியல் கலைகளுக்காக 1988 ஆம் ஆண்டு முதல் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்டு வந்த கவின் கலைகள் பயிலகமே இவ்வாண்டு முதல் கலைத் தூது அழகியல் கல்லூரியாக விரிவாக்கம் பெற்று தனக்கான புதிய நிரந்தரக் கட்டத்தில் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் பிரதான பாடங்களாக வாய்ப்பாட்டு, பரதம், கதகளி, வீணை, வயலின், கிற்றார், ஓர்கன், புல்லாங்குழல், மிருதங்கம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் என்பனவும் சிறப்புப் பாடங்களாக கூத்து, கண்டிய நடனம், சினிமாவும் தொழில் நுட்பமும் என்பனவும் கற்பிக்கப்படவுள்ளன. விரைவில் இன்னும் பல புதிய பாடங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-132,133)

# பினான்ஸ் கம்பனி நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

த பினான்ஸ் கம்பனி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பித்து 30 ஆவது வருட நிறைவைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் வாடிக்கையாளர்களின் எதிர்கால நலன்களை முன்னிட்டு பல சலுகைகளையும் உதவிகளையும் வழங்கி உள்ளதாக த பினான்ஸ் கம்பனி நிறுவனத்தின் யாழ்.கிளையின் பிராந்திய முகாமையாளர் முத்தையா இரகுநாதன் தெரிவித்தார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வறுமைக் கோட்டுக்குட்பட்ட மற்றும் உதவியற்ற நிலையில் உள்ள மக்கள் ஐவருக்கு தொழில் உபகரணம், இருப்பிடத்தை புனரமைப்பதற்கான நிதி மற்றும் எதிர்கால வாழ்வை வளம்படுத்துவதற்கான நிதி என்பன த பினான்ஸ் கம்பனியின் வடகிழக்குப் பிராந்திய இயக்குனர் செல்வி.மாலா சபாரட்ணத்தினால் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்கிழமை நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்திலும், குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும் வழங்கப்படவுள்ளது.

இலங்கை முழுவதிலும் வாழ்ந்துவரும் சகல இன மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வரும் எமது தலைவர் தேசமான்ய, டாக்டர் லலித் கொத்தலாவலவின் சரண நிதியம் ஊடாக இது போன்ற பல உதவிகளைத் தொடர்ந்தும் நாம் வழங்கத் தீர்மானித்துள்ளதோடு எமது கிளை ஆரம்பித்து முப்பதாவது வருட பூர்த்தியை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு பல சலுகைகளையும் நாம் வழங்குகின்றோம் என யாழ்.பிராந்திய முகாமையாளர் முத்தையா இரகுநாதன் மேலும் தெரிவித்தார். (த)

# இன்பத்தமிழ் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாண்ம்)

வட்டுக்கோட்டை அராலி தெற்கு துறைமுக வீதியில் அமைக்கப்பெற்ற இன்பத்தமிழ் முன்பள்ளி கட்டடத்திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் கிராமசேவையாளர் க.கனகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்ட செயலாளருமான கே.கணேஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக யாழ்.பல்கலைக்கழ புவியியல் பீடாதிபதி பேராசிரியர் கா.குகபாலன், சங்கானை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் மோகன்ராஸ், சுழிபுரம் பிரதேச சபை செயலாளர் இரா.ராசதுரை, எவ்.ரி.யூ.டி.சி தலைவர் ஜி.வி.டி. திலகசிரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அதிபர் மா.சோமசேகரம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி. மலர் சின்னையா, ஆர்.டி.ஓ குடத்தனை சீவரத்தினம், அராலி ஓய்வுபெற்ற அதிபர் வி.சிவஞானபோதம், அராலி தெற்கு கிராமசேவையாளர் சிறிகரன் ஆகியோரும்,

சிறப்பு அதிதிகளாக கிராம சேவையாளர் விஜயவேல், அராலி அ.மி.பாடசாலை காய்த்திரி நகுலராஜா, வட்டுக்கோட்டை முன்பள்ளி பிரதேச இணைப்பாளர் நா.நிரஞ்சனா, அராலி சரஸ்வதி முன்பள்ளி அதிபர் செல்வி.பொன்மணி, திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவரும், சமாதான நீதவானுமான சு.பசுபதி, முன்னாள் அதிபர் க.இராசரத்தினம், முன்னாள் அதிபரும் சமாதான நீதவானுமான சி.சண்முகநாதன், சமுர்த்தி அதிகாரிகளான க.தர்ஷன், வ.சுரேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை மூளாய் தென்னிந்திய திருச்சபையின் யோசுவா வணபிதா சிவலோகநாதன் தேசிகர் வழங்கவுள்ளார். (த-9)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச வரியிறுப்பாளர் சங்கத்தின் கொக்குவில் இந்து மயான புதிய நிர்வாக சபைத் தெரிவிற்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் நடைபெறவிருப்பதால் மயானத்தை பயன்படுத்தும் அனைத்து பொது மக்களையும் கலந்துகொள்ளுமாறு மேற்படி சங்கம் கேட்டுள்ளது. (த-39)

## ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும் சட்டமா மேதையுமாகிய ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39 ஆவது நினைவு தினம் நேற்றுமுன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 9.00 மணிக்கு இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்.தலைவரும் முன்னாள் மாநகர சபை உறுப்பினருமாகிய செல்லையா விஜயரட்ணம் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் கூட்டணி உறுப்பினர்கள், முன்னாள் மாநகராட்சி மன்ற உறுப்பினர், ஆதரவாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் திருவுருவத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (க)

## மரணக் கொடுப்பனவு 10000 ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி பயன்பெறும் குடும்பத்தில் மரணிக்கும் ஒருவருக்கு மரணக் கொடுப்பனவாக சமுர்த்தி சமூகக் காப்புறுதி நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாவை வழங்குமாறு சமுர்த்தி ஆணையாளர் யு.என்.றொட்றிகோ சகல மாவட்ட செயலாளர்களுக்கும், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மரணக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இக்கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சமுர்த்தி பயன் பெறுவோரின் குடும்பத்தில் முதல் பிறக்கும் குழந்தைக்கு 5 ஆயிரம் ரூபாவும், அதே குடும்பத்தில் பிறக்கும் இரண்டாவது குழந்தைக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும். (க-9)

## தொண்டர் ஆசிரியர் விபரம் சேகரிப்பு

தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நியமனம் கிடைக்கப்பெறாதவர்கள் தங்களுடைய முழு விபரங்களுடன் அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளருடாக மேன்முறையீட்டுக் கடிதம் ஒன்றையும் எழுதி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட தலைவர் வ.கணேச மூர்த்தி, யாழ். மாவட்ட செயலாள்ர் குமாரசாமி ஆகியோரிடம் கையளிக்குமாறு சங்கத்தின் உடுப்பிட்டி கிளைச் செயலாளர் கி.விஜயகுமார் கேட்டுக் கொண்டுள்ளார். (த- 109)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(துன்னாலை)

யா.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் அதிபர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார். (த-101)

* * *

யா.உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக பொறியியலாளர் தம்பு கிருஷ்ணனும் பாரியாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-101)

# புதிய வீடுகள் அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கள்ளப்பாடு கிராமத்தில் 25 பயனாளிகளுக்குப் புதிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரியும் மெதடிஸ்த தேவாலய பங்குத் தந்தை ஞானரூபனும் இத் திட்டத்திற்கான உடன்படிக்கையில் வியாழக்கிழமையன்று தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இதற்கான நிதியினை மெதடிஸ்த தேவாலய அமைப்பு வழங்கவிருக்கிறது. முல்லைத்தீவில் உள்ள கள்ளப்பாடு கிராமம் ஆழிப்பேரலையால் முற்றாக அழிந்துபோன கிராமங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# சுகாதார பொருட்கள் அன்பளிப்பு

(திருகோணமலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை கிளையினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார பொதிகளை வழங்கி வருகின்றனர். குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் பாதிப்புக்குள்ளான 2322 குடும்பங்களுக்கு இவை வழங்கப்படுகின்றது.

ஏலவே ஈச்சிலம்பற்றுவில் 1332, மூதூர் மேற்கில் 1200, மூதூர் கிழக்கில் 970, பட்டணமும் சூழலும் பிரதேசத்தில் 600, கிண்ணியாவில் 3500, சேருவாவில் 196 என 21300 குடும்பங்களுக்கு 4 கட்டங்களாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பெரியகுளம், இக்பால்நகர், வேலூர் பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு இப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டது.

அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் வைத்து இவை வழங்கப்பட்டது. (த)

# இளைஞரைக் காணவில்லை ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியாவிலிருந்து கொழும்பிற்குச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சிதம்பரநாதன் தமிழீசன் (24) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளதாக அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பிற்குச் சென்றதாகவும் டிசம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் தனது வீட்டாருடன் தொடர்பு கொள்ளவில்லை எனவும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறைப்பாடு தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினிடம் கேட்கப்பட்டதாகவும், ஆனால் தாம் இப்படியான ஒருவரையும் கைதுசெய்யவில்லையென அவர்கள் தெரிவித்ததாகவும் மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா கிளையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் காணாமல் போனது தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்பவற்றிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (த)

## கும்பாபிஷேகம்

பருத்தித்துறை வராத்துப்பளை கொள்ளெல்லை மகா கணபதிப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராசக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடாத்தி வைப்பார். (த-35)

# அடிக்கடி மின்தடை

(மருதங்கேணி)

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் மாணவர்கள் மற்றும் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில இடங்களில் மின்சாரம் வலுக்குறைந்து காணப்படுவதால் பாவனையாளர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-35)

# கொடுப்பனவு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

வறிய குடும்பங்களிலுள்ள வலது குறைந்தோருக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ் வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தில் முதற்கட்டமாக 2150 வறிய குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தை துரித கதியில் நடைமுறைப்படுத்தவென நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமூக சேவைகள் சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர் விஜி செகராஜசிங்கம் தெரிவித்தார்.

மேலும் தொழில் புரியும் வலது குறைந்தோரின் நன்மை கருதி இனிவரும் காலங்களில் அமைக்கப்படும் கட்டடங்கள் யாவும் அங்கவீனமானவர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு அமைக்கப்படவுள்ளன.

பல கட்டடங்களில் மாடிப் படிகள் மாத்திரமே இருப்பதனால் வலது குறைந்தோர் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், ரயில் நிலையம், விமான நிலையம் போன்ற பொது மக்கள் கூடும் பல முக்கிய இடங்களில் சைகை மொழியை கட்டாயப்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் மற்றும் சுயதொழிலில் ஈடுபட்டிருக்கும் வலது குறைந்தோர் 60 வயதுக்குப் பின்னர் எவரிலும் தங்கி வாழாமல் இருப்பதற்காக புதிதாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சித்த சுவாதீனம் குறைந்தோர் இத்திட்டம் மூலம் 45 வயது முதல் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-9)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

46 மீள்பார்வை



நான் ஒரு யானைக் குட்டியைக் கொடுத்தேன். அமெரிக்காவிலுள்ள இந்தியானா பொலிஸ் என்ற இடத்திற்கு அந்த யானைக் குட்டியை விமானத்தில் அனுப்பி வைத்தேன். நான் இந்தப் பரிசைக் கொடுக்கும் சமயத்தில், அமெரிக்காவில் ஜான் கென்னடிதான் பிரசிடெண்ட்டாக இருந்தார். 'யாரோ ஒரு இந்தியன் ஆக்டர், குழந்தைகளுக்கு யானை கொடுத்திருக்கிறார்' என்று அவருக்குத் தெரிந்திருக்கிறது. அது யாரென்று கேட்டிருக்கிறார். மெட்ராஸ் யு.எஸ்.எம்பஸியிலிருந்து, என்னைப் பற்றிய தகவல்களை அனுப்பியுள்ளார்கள். உடனே அவர், 'ஏன் நமது நாட்டுக்கு அவரை அழைக்கக்கூடாது?' என்று கேட்டிருக்கிறார்.

அங்குள்ளவர்களும் சம்மதம் தெரிவித்து, என்னை V.V.I.P. அதாவது மிக மிக முக்கிய விருந்தாளி என்ற கௌரவத்தில், அவர்களுடைய கலாச்சாரப் பரிமாற்றத்தின் கீழ், அமெரிக்காவிற்கு அழைத்தார்கள்.



அமெரிக்க குழந்தைகளுக்கு யானைக் குட்டியைப் பரிசாக அளித்தது

இந்தியாவிலிருந்து நடிகன் என்ற தகுதியில் அழைக்கப்பட்டவர்களில், நான்தான் முதன் முதலில் அழைக்கப்பட்டவன். டென்னிஸ் காக்ஸ் என்பவர், அப்போது சென்னையில் யு.எஸ். எம்பஸியில் விசா டிபார்ட்மெண்ட்டில் இருந்தார். அவருக்கு நன்றாகத் தமிழ் தெரியும். அவரைத்தான் எனக்கு செக்ரெட்டரியாக நியமித்திருந்தார்கள்.

அமெரிக்கா புறப்படும் முன்பு, ஒரு முக்கியமான வேலை முடிக்க வேண்டியிருந்தது. 'பலே பாண்டியா' என்ற படத்தில் அப்போது ஒப்பந்தமாகி இருந்தேன். அந்தப் படத்திற்காக 2ஆம் திகதி ஸ்டுடியோ செட்டிற்குள் சென்றேன். 12 ஆம் திகதி படத்தை முடித்துவிட்டு, வெளியே வந்தேன். 11 நாட்களில் ஒரு படத்தின் முழு வேலையும் முடித்துக் கொடுத்தேன். அது ஒரு உலக ரெக்கார்ட் என்று சொல்லலாம்.

அந்தப் படத்தில் நான் மூன்று கேரக்டர்களில் நடித்துள்ளேன். எம்.ஆர்.ராதா அவர்கள் இரண்டு கேரக்டர்களில் நடித்துள்ளார்கள். நாங்கள் இருவரும் சேர்ந்து ஐந்து கேரக்டர்களில் நடித்திருக்கிறோம். இந்தப் படம் பதினொரு நாட்களில் முடிக்கப்பட்டது. படத்தை முடித்துவிட்டு நேராக பம்பாய் சென்றேன். அங்கு திரைப்படத் துறையைச் சேர்ந்த பலர் வந்திருந்து என்னை வழியனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து நேராக ரோமிற்குச் சென்றேன். ரோமில் போப்பாண்டவரைச் சந்திக்க, கவர்மெண்ட் ஏற்பாடு செய்திருந்தது. அவரைச் சந்தித்து, அவருடன் உணவருந்துவதற்காக ஒரு புரோகிராம் இருந்தது. நான் துரதிர்ஷ்டக்காரன். நான் ரோம் செல்வதற்கு ஒரு வாரம் முன்பே போப்பாண்டவர் இறந்துவிட்டார்.

அதனால் அவரைப் பார்க்கமுடியவில்லை. நான் ரோம் சென்றபோது, அங்குள்ள தமிழ் மக்கள் எனக்கு நல்ல வரவேற்புக் கொடுத்தார்கள். அதன் பின் லண்டன், பாரீஸ் முதலிய இடங்களுக்குச் சென்றேன். அங்கு இந்தியன் அசோசியேஷனில் பெரிய வரவேற்புக் கொடுத்தார்கள். எல்லா இடங்களிலும் தமிழ்மக்கள் மிக அன்பாகப் பழகினார்கள். பாரிஸிலிருந்து நேராக அமெரிக்கா சென்றேன்.

அமெரிக்க அரசாங்கம் எனக்கு இரண்டு கார் கொடுத்திருந்தார்கள். இரண்டு செக்ரெட்டரி கொடுத்திருந்தார்கள். ஒருநாளைக்கு 160டாலர். பாக்கெட் மணி கொடுத்தார்கள். இது 1962இல். அப்போது அதன் மதிப்பு எவ்வளவு இருந்திருக்குமென்று யோசித்துப் பாருங்கள்.


### ஹாலிவுட் நடிகர்களுடன்...

டி.எஸ்.என்: நீங்கள் அமெரிக்கா செல்லும் போது, வேறு யாராவது உங்களுடன் வந்திருந்தார்களா? அங்கே யார் யாரைச் சந்தித்தீர்கள்?

சிவாஜி: என்னுடைய நண்பர்கள் இருவரும், செக்ரெட்டரி ஒருவரும் வந்திருந்தார்கள். அவர்கள் தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தார்கள். ஹாலிவுட் நடிகர்கள், எலிசபெத் டெய்ண், ரிச்சர்ட் பர்ட்டன், மார்லன் பிராண்டோ, மார்லின் மன்றோ போன்றவர் களைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்போது ஹாலிவுட் நடிகர் ரிச்சர்ட் பர்ட்டனுடம், நடிகை எலிச பெத் டெய்லரும் 'கிளியோபாட்ரா' படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்கள். எலிசபெத் டெய்லர் அவர்களுடன் நான் டீ சாப்பிட ஏற்பாடாகியிருந்தது.



'ஆபிரிக்க ஆசிய திரைப்பட விருது' பெற, கெய்ரோ சென்ற போது சித்ரா கிருஷ்ணஸ்வாமி, பி.ஆர்.பந்துலுவுடன்...



இங்கும் என் துரதிர்ஷ்டம் என்னைத் துரத்தியது. நான் போக வேண்டிய நேரத்தில், எனது நண்பர் ஒருவர் தாமதம் செய்து, எனக்குக் கார் இல்லாமல் செய்துவிட்டார். அதன்பின் தாமதமாக நான் சென்ற போது, ரிச்சர்ட் பர்ட்டனும், எலிசபெத் டெய்லரும் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

நண்பர்களால் சில சமயத்தில் என்ன உபத்திரவம் ஏற்படலாம் என்பதற்காக, இதை உதாரணமாகச் சொல்கிறேன். அடுத்தாற்போல், பாப் ஹோப் என்ற நடிகருடன் ஒரு லஞ்ச் அரேஞ்ச் பண்ணியிருந்தார்கள். ஸ்டெல்லா ஸ்டூடியோவில் அவரைப் பார்க்கச் சென்றேன். அப்போதும் என்னுடைய நண்பர் லேட் செய்துவிட்டார். அதனால் நான் பாப் ஹோப்பையும் பார்க்கமுடியவில்லை. காலம் தவறாமல் கடமைகளைச் செய்யும் எனக்கு, இது ஒரு சோதனை போல் அமைந்தது.

மற்றொரு ஏமாற்றமும் நிகழ்ந்தது. மர்லின் மன்றோ என்ற உலகப் புகழ்பெற்ற ஹாலிவுட் நடிகை இருந்தார்கள். அவர்கள் மிக அழகாக இருப்பார்கள். அவர்கள் என்னை சந்திக்க ஒரு டீ டை மீட்டிங் அரேஞ்ச் செய்திருந்தார்கள். ஆனால், நான் அவர்கள் வீட்டிற்குப் போகும்போது அவர்கள் ஏதோ அவசர வேலையாகச் சென்றுவிட்டார்கள்.

அதற்காக ஆர்ட்டிஸ்ட் கில்ட் சார்பில் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். அதன் பிறகு, கில்ட் அங்கத்தினர்களே கூட்டிச்சென்று எனக்குப் பெரிய மரியாதை செய் தார்கள். (தொடரும்)

# ஜெனீவா பேச்சு குறித்து முப்படைத் தளபதிகளுடனும் ஜனாதிபதி ஆலோசனை

ஜெனீவாவில் இடம்பெறவிருக்கும் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முப்படைத் தளபதிகளுடனும் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக ஜெனீவாவில் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே மஹிந்த ராஜபக்ஷ இந்த தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தப் பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரச குழுவிற்கு ஜனாதிபதி செயலகத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வரும்.அதேவேளை, பேச்சுகளில் ஆராயப்படவுள்ள முக்கிய விடயங்கள் குறித்து முப்படைத் தளபதிகளுடனும் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தார்.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் சில முக்கியமான சரத்துகளில் திருத்தங்கள் அல்லது மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று படைத் தரப்பினர் வலியுறுத்தி வரும் நிலையில், மஹிந்த ராஜபக்ஷவுடனான இந்தச் சந்திப்பில் முப்படைத் தளபதிகளும் இதுகுறித்து விளக்கம் அளித்துள்ளனர்.

போர் நிறுத்த உடன்பாட்டில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் குறித்தும், முப்படையினரது சிபாரிசுகள் , கூட்டுப் படைகளின் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஊடாக ஜனாதிபதியிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் இந்த உடன்பாட்டில் சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று படைத் தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதேநேரம் போர்நிறுத்த உடன்பாட்டில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக படைத்தரப்பினர் வலியுறுத்தும் விடயங்களை ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அரசின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுடனும் ஜெனீவாப் பேச்சுகள் குறித்து ஜனாதிபதி கலந்தாலோசித்துள்ளார். (க)

# அரசாங்கக் குழுவினருக்கு பீரிஸ், மிலிந்த ஆலோசனை

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுகளுக்காக செல்லும் அரசாங்கக் குழுவினருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரை ஆலோசனை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்தவின் வேண்டுகோளை கடந்த புதன்கிழமை அரசாங்கக் குழுவினருக்கு ஜீ.எல்.பீரிஸ் தனது அனுபவங்களை விளக்கினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இவ் அழைப்பானது வியப்பூட்டுவதாக இருக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் தூதுவராக மிலிந்த மொறகொட இந்தியப் பயணம் மேற்கொண்டுள்ளதால் இன்று சனிக்கிழமை அரசாங்கக் குழுவினருக்கு அவர் ஆலோசனை வழங்கவுள்ளார்.

அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இருவரையும் ஆலோசனை வழங்கச் செல்லுமாறு அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒப்புதல் அளித்திருக்கிறார். (க)

# பயங்கரவாத விவகாரப் பிரிவு மீண்டும் செயற்படும் !

(கொழும்பு)

நீண்டகாலம் செயற்பாடற்று இருந்த பயங்கரவாத விவகாரங்களைக் கண்டறியும் பிரிவின் செயற்பாடுகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவில் கடமையாற்றி கடந்த சில வருடங்களாக வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் அந்தப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதற்கமைய எதிர்வரும் காலங்களில் பயங்கரவாதம் சம்பந்தமான அனைத்து விசாரணை நடவடிக்கைகளும் இந்தப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து இந்தப் பிரிவு செயலிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# திருட்டு முயற்சி

(சாவகச்சேரி)

கொச்சை சிங்களத்திலும், தமிழிலும் பேசி வீட்டுக் கதவை திறக்குமாறு கோரி மிரட்டியவர்களின் திருட்டு முயற்சியை அறிந்த வீட்டு உரிமையாளர்கள் கதவைத் திறக்காது அவலக்குரல் எழுப்பியதையடுத்து திருடர்கள் தப்பிச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த 7ஆம் திகதி கச்சாய் றோட் பேரம்பலம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்தில் உள்ள வீடு ஒன்றில் திருடர்கள் வழமைபோன்று தம் கைவரிசையைக் காட்ட முயற்சித்தனர்.

முகங்களை அடையாளம் காணமுடியாத வகையில் ஹெல்மட் அணிந்து சென்ற திருடர்கள், கொச்சை சிங்களத்தால் பேசி கதவைத் திறக்குமாறு கோரியுள்ளனர்.

இவர்களை இனங்கண்ட குறிப்பிட்ட வீட்டு உரிமையாளர்கள் கதவைத் திறக்காது அவலக்குரல் எழுப்பினர். இதனையடுத்து திருடர்கள் அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றனர். (க-108)

# அப்துல் கலாமின் புத்தகத்திற்கு தென்கொரியாவில் வரவேற்பு

ஜனாதிபதி அப்துல் கலாம் எழுதிய புத்தகங்களுக்கு தென்கொரிய இளைஞர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது. 'அக்னிச் சிறகுகள்' புத்தகத்தை தொடர்ந்து கலாம் எழுதிய 'வழிகாட்டும் ஆன்மாக்கள்' என்ற அடுத்த புத்தகம் கொரிய மொழியில் மொழி பெயர்க்கப்படுகிறது.



ஜனாதிபதி அப்துல் கலாம் தென் கொரிய பயணத்தில் இருந்தபோது அங்குள்ள கத்தோலிக்க பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியை ஓக்ஜுங்லீ என்பவர் அவரைச் சந்தித்தார். பேராசிரியை லீ ஜனாதிபதி கலாம் எழுதிய அக்னிச் சிறகுகள் புத்தகத்தை தென்கொரிய மொழியில் மொழி பெயர்த்தவர். அவருக்கு இந்தியாவைச் சேர்ந்த அருண்தி வாரி என்பவர் உதவி செய்தார்.

தற்போது கலாமை சந்தித்த லீ அவருடைய வழிகாட்டும் ஆன்மாக்கள் புத்தகத்தை கொரிய மொழியில் மொழிபெயர்க்க அனுமதி வேண்டினார். புத்தகத்தை மொழி பெயர்க்க காரணம் மற்றும் அவருடைய ஆர்வம் குறித்து விசாரித்த அப்துல் கலாம் வழி காட்டும் ஆன்மாக்கள் புத்தகத்தின் பிரதி ஒன்றில் கையெழுத்திட்டு பரிசாக அளித்தார்.


கலாமின் புத்தகங்கள் மொழி பெயர்ப்பு செய்வது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த லீ அக்னிச் சிறகுகள் புத்தகத்தில் பெற்றோர் ஆசிரியர்கள் குறிப்பாக தாயார் மீது அன்பு காட்டியது குறித்து அப்துல் கலாம் எழுதியதை கொரிய இளைஞர்கள் வெகுவாக விரும்பினர். மிகப் பெரிய அறிவியல் கண்டுபிடிப்பு .களை கண்டுபிடித்தும் எளிமையாக இருக்கும் கலாமை தென் கொரிய இளைஞர்கள் தங்களது முன் மாதிரியாக கொண்டுள்ளனர். 15ஆவது நூற்றாண்டின் போது 32 ஆண்டு காலம் கொரியாவை ஆட்சி செய்த அரசன் சிஜோங்கை அப்துல் கலாம் வடிவில் பார்க்கிறோம் என்றார். (கு)

WORLD NEWS உலக தரிசனம்

# ஊர்வலத்தில் குண்டுவெடிப்பு; பாகிஸ்தானில் 15 பேர் பலி!

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் கலந்துகொண்ட மொகரம் ஊர்வலத்தில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பில் 15பேர் பலியாயினர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இந்தக் குண்டு வெடிப்பு தற்கொலைப் படைத் தாக்குதலாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.





முஸ்லிம் மக்களால் மொகரம் பண்டிகை நேற்று முன்தினம் உலகெங்கிலும் கொண்டாடப்பட்டது. இஸ்லாமாபாத்தின் வடமேற்குப் பகுதி யான ஹங்குவில் நேற்று முன்தினம் மொகரம் பண்டிகையை முன்னிட்டு ஷியா பிரிவு முஸ்லிம்கள் ஊர்வலம் சென்றனர். ஊர்வலத்தில் திடீரென நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 15பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர். மேலும் பலர் படுகாய மடைந்தனர்.

குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டு அருகில் உள்ள மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் நாலா பக்கமும் சிதறி வெளியே ஓடினர். இதனால் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் ஆத்திர மடைந்து வன் முறைச் சம்பவத்தில் ஈடுபட்டனர்.

அருகில் இருந்த அரசு அலுவலகங்கள், வர்த்தகக் கட் டடங்கள் அப்பகுதியில் நின்றிருந்த வாகனங்கள் உள்ளிட்ட அனைத்தையும் அடித்து நொறுக்கினர். தீயிட்டு கொளுத்தினர். இந்த சம்பவங்களால் மத ஊர்வலம் வன்முறையாக மாறியது.

மதத் தலைவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை வன்முறைச் சம்பவத்தில் ஈடுபடாமல் அமைதி காக்கும்படி கேட்டுக்கொண்டனர். எனினும் யாரும் கேட்கவில்லை. (கு)



பர்கூர் மலையில் சோளகளை என்ற இடத்தில் நிலத்தில் ஏற்பட் டுள்ள விரிசல்.

# அரசியல் கட்சிகள் நேபாளத்தில் பேரணி

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி தொண்டர் ஒருவர் அந்நாட்டு இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதை கண்டித்து நேபாள அரசியல் கட்சிகள் சார்பில் நேற்று முன்தினம் பேரணிகள் நடத்தப்பட்டன.

நேபாள மன்னர் உத்தரவுப்படி கடந்த புதன்கிழமை அந்த நாட்டில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. மன்னர் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உள்ளாட்சி தேர் தலை புறக்கணிக்க வேண்டும் என்று அந்நாட்டு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

மேலும் மாவோயிஸ்ட் தீவிரவாத இயக்கமும் தேர்தலில் பங்கேற்ககூடாது என்று அறிவித்திருந்தது. இந்நிலையில் புதன்கிழமை வாக்குப் பதிவு நடைபெற்றது.

தேர்தல் நடைபெற்றபோது அரசியல் கட்சிகள் சார்பில் ஆங்காங்கே போராட்டங்கள் நடத்தப்பட்டன. நேபாள நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தாங் மாவட்டத் தில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேரணி நடத்தப்பட்டது. இந்த பேரணி மீது நேபாள இராணுவத்தினர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர் இதில் கம்யூ கட்சியைச் சேர்ந்த தொண்டர் ஒருவர் பலி யானார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.



நேபாள இராணுவம் நடத்திய இந்த தாக்குதலை கண்டித்து அந்நாட்டு கட்சிகள் நேற்று முன்தினம் பேரணிகளை நடத்தின. ஒவ்வொரு கட்சி சார்பிலும் தனித் தனியே பேரணி நடத்தப்பட்டது.

இதில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மன்னர் ஆட்சிக்கு எதிராகவும் உள்துறை அமைச்சருக்கு எதிராகவும் பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. எதிர்க்கட்சிகள் நடத்திய இந்த போராட்டத்தினால் தாங் மாவட்டம் முழுவதும் பள்ளிகள் கல்லூரிகள் செயல்படவில்லை. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. சாலைகளில் வாகன போக்குவரத்து நடை பெறவில்லை.



நேபாள கம்யூ தலைவர்களில் ஒருவர் இதுபற்றி கூறுகையில் உள்ளாட்சி தேர்தலுக்கு எதிராக அமைதியான முறையில் நடத்தப்பட்ட பேரணி மீது இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது. இதில் எங்கள் கட்சித் தொண்டர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதற்கு உள்துறை அமைச்சர்தான் காரணம். நேபாள உள்ளாட்சி தேர்த லில் வெறும் 21சதவீத வாக்குள் மட் டுமே பதிவாகியுள்ளது. இதன் மூலம் மன்னர் நடத்திய தேர்தல் தோல்வியில் முடிந்துள்ளது. என்றார்.

இதற்கிடையே நேபாளத்தில் மாயேிஸ்ட் தீவிரவாதிகள் நடத்தி வந்த நாடு தழுவிய போராட்டம் நேற்று முன்தினம் நான்காவது நாளாக நீடித் தது.

மன்னர் நடத்திய தேர்தல் தோல்வியடைந்தால் போர்ாட்டத்தை வாபஸ் பெறுவது என மாவோயிஸ்ட் தீவிர வாதிகள் முடிவு செய்துள்ளனர். ஆனால் நேபாள உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் அனைத்தும் மன்னராட்சிக்கு ஆதரவு அளித்து வருபவர்களுக்கு சாதகமாகவே வெளி வந்துள்ளன.

(கு)



காதலர் தினத்தையொட்டி சீனாவில் நஞ்சிங் நகர கடையொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள தங்க ரோஜாக்கள்

அவரவர் கடமையை அவரவர்க்கு விதித்தபடி செய்து வருவதே நலம்.

-சுவாமி ராமதாசர்

வலம்புரி

# சிறுவர், முதியவர்களின் உணர்வை மதிப்போம்

உலகமயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இயந்திர மயமாகிவிட்ட மனித வாழ்வு இன்று அர்த்தமற்றதாகிப் போய்விட்டது.

குடும்ப உறவுகள் தாய்-பிள்ளைப்பாசம் என்பன கூட வர்த்தகமயப்படும் அளவிற்கு மனித விழுமியம் அதலபாதாளத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

இத்தகைய கொடூரமான மனித வாழ்வியல் சிதைவுகள் வெளிநாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும்,

அவற்றின் தாக்கம் குடும்ப உறவில் மிகவும் இறுக்கமான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த தமிழ் இனத்தையும் தாக்கவே செய்துள்ளது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பெற்றவர்களை தெய்வமாகப் போற்றி உலகிற்கே பெரும் தத்துவத்தை உணர்த்திய தமிழினம் இன்று தனது பண்பாட்டு விழுமியங்களை கைநழுவ விடுவதற்கு தயாராகி விட்டது.

வெளிநாட்டு நாகரிக நாட்டம், சினிமாவில் கொண்டுள்ள மோகம், ஓய்வின்றி உழைக்கும் தன்மை, முதியவர்களை வெறுக்கும் மனப்பாங்கு போன்றவை காரணமாக நமது மண்ணில் எத்தையோ முதியவர்கள் கவனிப்பார் இன்றி அநாதைகளாக விடப்பட்டுள்ளனர்.

கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் குதூகலமாக இருந்த ஈழத்தமிழர் வாழ்வியல், யுத்தம் என்ற கொடூரம் காரணமாக சின்னாபின்னமாகிப் போனது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் முதியவர்களும் சிறுவர்களுமே.

யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வு, குடியிருப்பதற்கு போதிய வசதியின்மை, வருமான இன்மை போன்றவை பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்த பெற்றவர்களை பிள்ளைகளுக்கு சுமையாக்கியது.

தாம் சுமந்து பெற்ற பிள்ளைகள் தள்ளாத வயதில் தம்மை சுமப்பார்கள் என்று எண்ணியிருந்த பெற்றவர்கள் பலர். முதியோர் இல்லங்களிலும் நலன் புரிநிலையங்களிலும் இருந்தவாறு முதுமையின் கொடுமையை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

இதேபோன்று சிறுவர்களின் நிலைமையும் மிகவும் பரிதாபத்திற்குரியது. வறுமையில் வாடும் பாலர்கள் குடும்ப பாரத்தை தாங்கும் சிறுவர்கள் பெற்றவர்களை இழந்து மனித வாழ்வை வெறித்துப் பார்க்கும் அநாதைகள் என்று ஒரு பெரும் பட்டியலையே தயாரித்து விடமுடியும்.

இதற்குமேலாக மதுபோதையில் வரும் தந்தையின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை தாங் கும் பிஞ்சுடல்கள் வளர்ந்தவர்களின் கட்டளை களை பயந்து நடுங்கி நிறைவேற்றும் குழந்தை கள் இப்படி எத்தனையோ சோகரேகைகள் எம் மண்ணில் படர்ந்து போயுள்ளன.

இவையெல்லாவற்றுக்கும் அடிப்படைக்காரணங்களாக இருக்கக்கூடியது குடும்ப உறவே. அதனை செப்பமிடுவதன் மூலமே முதியவர்கள், சிறுவர்களின் உணர்வுகளை அறியவும் அதனை மதிக்கவும் முடியும்.

குறிப்பாக தனது கணவனின் பெற்றோரை வெறுக்கும் மனையாள், மனைவியின் தாய், தந்தையரை ஒதுக்கும் கணவன் என்ற மனித நேயமற்ற குடும்ப உறவு சீராக்கப்படவேண்டும்.

இளமையில் வறுமையும் முதுமையில் தனிமையும் கொடியதுஎன்ற உண்மையை உணர்ந்து அனைவரும் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். இதுவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதி உரையாகும்.

# திருப்புமுனையா? திசை திருப்பும் முனையா? ஜெனீவா மாநாடு பற்றி ஒரு கண்ணோட்டம்

எதிர்வரும் 22,23 ஆம் நாட்களில் ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் நடைபெறப் போகும் பேச்சுவார்த்தை பொருள் பொதிந்ததாக அமையப் போகிறதா? அல்லது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சொற் பயிற்சி வழங்குவதற்காக நடைபெறும் சொற்போராகவோ விவாதமாகவோ அல்லது பட்டிமன்றமாகவோ நடைபெறப்போகிறதா? என்பதுவே இப்பொழுது எழுந்துள்ள மிகப் பெரும் கேள்வி ஆகும். ஊடகங்களில் வந்த செய்திகளின் படி இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் அரச தரப்பினருக்கு பயிற்சி வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

57 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் இனச் சிக்கல் புரையோடிய ஒரு புண்ணாக உருவெடுத்துள்ளது. இதற்குத் தீர்வு காண்கின்ற முறையிலேயே இப் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டுமேயன்றி தமிழினத்தைத் தீர்த்துக் கட்டுகின்ற முறையில் விதண்டாவாதம் செய்வதையோவெறும் சொற்போர் நடாத்துவதையோ எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பேச்சுவார்த்தைகள் எவ்விதம் அமைய வேண்டும் என்பது பற்றி முதிர்ச்சி பெறாதோர்க்கு அரசு பயிற்சி வழங்குவது தவறு அல்ல. ஆனால் இப்பயிற்சியை அமெரிக்க அரசு வழங்கவிருப்பதாக வரும் செய்திகளை வரவேற்க முடியாதுள்ளது.

தமிழர் எக்கேடு கெட்டாலும் கவலை இல்லை. ஆனால் சிங்கள அரசைக் கட்டிக்காத்து, அரவணைப்பதில் தான் அமெரிக்க அரசிற்கு அக்கறை உள்ளது போல் தெரிகிறது.

உலக நாடுகளின் உள்நாட்டு அரசியலில் தேவையற்று மூக்கை நுழைத்து அவமானப்பட்ட வரலாறு அமெரிக்க அரசிற்கு நிறைய உண்டு. வியட்நாம் போரில் தமக்கு ஏற்பட்ட படு வீழ்ச்சியைப் பட்டுணர்ந்த நிலையிலும் பாடம் படிக்க மறுக்கிறது. அமெரிக்க அரசு, ஈரான், ஈராக் போன்ற நாடுகளிற் கூட தேவையில்லாமல் தலையிட்டு இரத்தக் களரியை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. பலஸ்தீன மக்கள் திரண்ட ஆதரவோடு ஹமாஸ் இயக்கம் ஆட்சி அமைத்ததைக் கண்டு அமெரிக்க அரசு புகைகிறது. மக்கள் தீர்ப்பை மதிக்க மறுக்கிறது.

1986 இல் அமெரிக்க அரசிற்கும் எமக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் 20ஆண்டுகள் உருண்டோடிய நிலையில், 'இலங்கைக்கு இணைப்பாட்சி ஏற்றதுதான்; ஆனால் நாம் அதனை வலியுறுத்த மாட்டோம்' எனச் சொற்களை முழுமையாக உச்சரிக்க முடியாத நிலையில் அமெரிக்காவின் சிந்தனையும் செயற்பாடும் அமைந்துள்ளது. எனவே தான் இன்றைய சூழ்நிலையில், ஜெனீவாவில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் சிங்கள அரசின் பேராளர்களுக்கு அமெரிக்க அரசு வகுப்பு நடாத்தப் போவதாக வெளிவந்துள்ள செய்தி, அமெரிக்காவின் உள்நோக்கை வியப்போடும் கேள்விக்குறியோடும் பார்க்கும் நிலைக்கு மக்களைத் தள்ளியுள்ளது.

ஜெனீவாவில் இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகளின் போது, தற்போது போர் நிறுத்த உடன்பாட்டு விதிகள் செம்மையாக நடைமுறைப்படுத்தப்படுவது பற்றியே பேசப்படும். ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் இது தான் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைத்துள்ள கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது. தமிழர்கள் படும் இன்னல்கள், அவர்களின் பிரச்சினைகள், அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கெடுபிடிகள் பற்றி புரிந்துகொண்டு ஜெனீவா பேச்சுக்கு வாருங்கள் என்று அரசு பேராளர்கள் குழுவிற்கு தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கை அரசின் தூதுக்குழுவிடம் ஒரு வேண்டுகோள் விட விரும்புவதாக கூறியுள்ள தமிழ்ச்செல்வன் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ்மக்களும் தென்னிலங்கையில் வாழும் தமிழ்மக்களும் தற்போது சந்தித்து வருகின்ற கெடுபிடிகளைப் பற்றி போதிய அளவு விளங்கிக் கொண்டு அரச தரப்பினர் வருவதுதான் பேச்சுவார்த்தைக்குப் பொருத்தமாய் இருக்கும்.

**மா.க.ஈழவேந்தன்**

கடந்த 57 ஆண்டுகளுக்கு மேலாக அடக்குமுறைக்கும் ஆதிக்கத்தின் கீழும் அல்லலுற்ற தமிழ் மக்கள் தம் உரிமைக்காக போராடிய வரலாற்றினையும் இந்தப் போராட்டத்தின் விளைவுகளையும் நன்கு உணர்ந்த நிலையில் தான் அரச தரப்பின் பேராளர்கள் ஜெனீவா மாநாட்டில் கலந்துகொள்வதில் பயனுண்டு.தமிழர் மறுவாழ்வுக் கழகத்தில் பணிபுரிந்தோர் கடத்தப்பட்ட நிகழ்ச்சி உட்பட, தமிழ் மக்களுக்குத் தீர்வை முன்வைக்கின்ற உறுதியான நிலைப்பாட்டோடு தான் பேச்சுவார்த்தைக்கு அரச தரப்பினர் வரவேண்டுமேயன்றி சொற்சிலம்பாட-விவாத மேடையாக ஜெனீவா மாநாட்டை ஆக்கக்கூடாது என்றும் தமிழ்ச் செல்வன் அவர்கள் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் கூறியுள்ள கருத்துக்கள், சிங்கள அரசைச் சிந்திக்க வைக்கும் என நம்புகின்றோம். 'மாறாக கருத்தை முறியடிக்கும் சமர் நடத்தும் களம் அல்ல ஜெனீவா சந்திப்பு' என்பதை அரசு தூதுக்குழு உணரவேண்டும் என்று தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள வேண்டுகோளை எவரும் எளிதில் புறக்கணிக்க முடியாது.

# கடற்தொழிலாளர்களுக்கு வருமான அதிகரிப்புக் கடன்

(மன்னார்)

மன்னார் விடத்தல் தீவுக் கிராம தொழிலாளர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வருமான அதிகரிப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது. விடத்தல் தீவுக் கிராமத்தில் 51 பயனாளிகளுக்கு வருமான அதிகரிப்புக்காக சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்க கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.தமிழர் புனர்வாழ்வுக் கிராமத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது. விடத்தல் தீவுக் கிராம இணைப்பாளர் பாலிசு நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

மங்கள விளக்கேற்றப்பட்டதையடுத்து வரவேற்புரையினை மாதர் சங்கத் தலைவர் மேரி ஜெயசீலா நிகழ்த்தினார். நிகழ்வின் முக்கியத்துவம் தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட இணைப்பாளர் அ.லோகநாதன் உரை நிகழ்த்தினார்.

கிராம அபிவிருத்தி அலுவலகர் சாந்தகுமார், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.வரப்பிரகாசம், பங்குத் தந்தை அருட்திரு அருள்நாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சிறப்புரையாற்றியதையடுத்து மன்னார் மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளரான காண்டீபன் 51 கடற்தொழி லாளர்களுக்குமான கடன் தொகைகளை வழங்கினார்.

இவர்களுள் 19 பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா இருபதாயிரம் ரூபா வீதமும், 32 பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதமுமாக 51 பயனாளிகளுக்கும் ஏழு இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் இக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

# வீதி விபத்தில் சிப்பாய் பலி

(மன்னார்)

மன்னாரில் வீதி விபத்தில் சிப்பாய் ஒருவர் மரணமடைந்தார். 7படையினர் படுகாயமடைந்தனர். மன்னார்-முருங்கன் பிரதான வீதியில் 55 மற்றும் 56ஆம் மைல் கட்டைகளுக்கு இடையே மதவாச்சிக்கு படையினரை அழைத்துச் செல்லும்போது இச் சம்பவம் நடந்தது.

கடுமையான மழையால் வாகனம் நிலை தடுமாறியதாகவும் மரணமடைந்தவர் லான்ஸ் கோர்ப்ரல் பிரியந்த என்றும் இராணுவத் தரப்பினர் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த படையினர் அனைவரும் மதவாச்சி மருத்துவமனைக்கு முதலில் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஆபத்தான நிலையில் உள்ள சிலர் அனுராதபுரம் மருத்துமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (து)

# உயர்மட்ட விசாரணை

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைவருக்கு அனாமதேய தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி மூலமான அச்சுறுத்தல் குறித்து தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாக மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித் தார்.

இதுகுறித்து விசாரணை நடத்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு தலைவருக்கு தொலைபேசி மூலம் இரண்டு தடவை கள் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

**தினசரி தியானம்**

**விவேகச் சிந்தனைகள்**



தியானம், பற்றற்ற நிலையிலிருக்கும் தன்மை ஆகியவற்றை நாம் விடாமல் தொடர்ந்து பழகி வருவோமனால் காலப் போக்கில் நமது மனமும் நமது கட்டுப்பாட்டின் கீழ் தானாக வந்துவிடும். ஆனால் நாம் தினந்தோறும் குறிப்பிட்ட நேரங்களில் தவறாமல் தியானம் பழக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# அரச பங்காளிக் கட்சிகள் இடையே ஜெனீவாப் பேச்சு குறித்து முரண்பாடு

## அரச குழுவில் மாற்றம் ஏற்படுமெனத் தகவல்?

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்படவுள்ள விடயங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் குத்து வெட்டு ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆரம்பச் சுற்றுப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் கலந்துரையாடப்படாமை இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் அரசாங்கக் குழுவினரை வழிநடத்துவதற்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழு நியமிக்கப்பட்டிருந்தாலும் அதில் பங்காளிக் கட்சிகளான ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி, அரசாங்கக் கட்சியில் உள்ள முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கவில்லை எனவும், அத்துடன் அண்மையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அரசகுழுவினருக்கான பயிற்சிப் பாசறைக்கு மக்கள் ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு விடப்படவில்லை எனவும் அக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது போர் நிறுத்த ஒப்பந்தம் மாற்றியமைக்கப்படும் என கூறப்பட்ட போதிலும் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் தற்போது நடைமுறையிலுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்தே விவாதிக்கப்படவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கான சகல நடவடிக்கைகளையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமஜமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மக்கள் கட்சி என்பன இணைந்து மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

லங்கா சமஜமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன கூட்டமைப்பில் அங்கம் வகிக்கவில்லை. இந்நிலையில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் றோஜித போகல்லாகம உள்ளிட்ட குழுவினர் தொடர்பாகவும் ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற பங்காளிக் கட்சிகள் விருப்பம் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அரச குழுவில் முன்னர் நியமிக்கப்பட்டிருந்த சட்டத்தரணி பைஸ் முஸ்தப்பா விளக்கப்பட்டுள்ளதால் அவரது இடத்திற்கு ஒருவரை நியமிப்பதற்கும் இழுபறி நிலைமை ஏற்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-39)

### கல்வி நிர்வாக சேவை பரீட்சை கொழும்பில்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாகச் சேவைக்கான போட்டிப் பரீட்சை இன்று கொழும்பில் நடைபெறுகின்றது.

இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்துமாறு யாழ். பரீட்சார்த்திகள் கோரிய போதிலும் கல்வியமைச்சு அதற்கு அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

### முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

SAMSTEC நிறுவனத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும்மற்றும் பதிவுகளை மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், அங்கு கடமை புரியும் அலுவலர்கள் அனைவருக்குமான முக்கிய கலந்துரையாடல் பளை மத்திய கல்லூரியில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் முக்கிய முடிபுகள் எடுக்கப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

### ஜெனீவாப்...

கும் பிரச்சினைகள், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள குடியமர்த்தல் என்பன குறித்து முஸ்லிம் தலைவர்கள் ஜப்பானியத் தூதுவருக்கு விளக்கமளித்துள்ளனர்.

இதையடுத்து முஸ்லிம் குழுவிடம் பேசிய யப்பானிய தூதுவர், பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகளும் பங்கேற்க முழு ஆதரவளிப்பதாக உறுதியளித்தார் என்று இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

### குடும்பத்...

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் அவரது கணவன் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-74,4)

### பத்திரிகையாளர் குழு டென்மார்க் பயணம்

(யாழ்ப்பாணம்)

டென்மார்க் அரசின் அழைப்பின் பேரில் 20 பத்திரிகையாளர் அடங்கிய குழுவொன்று இன்று டென்மார்க் பயணமாகின்றது.

இலங்கையிலுள்ள மூவினத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் இக்குழுவில் அடங்குகின்றனர். வலம்புரிப் பத்திரிகையிலிருந்து ஆசிரியர் என்.சண்முகானந்தன் டென்மார்க் பயணமாவது குறிப்பிடத்தக்கது. (ச)

### முஸ்லிம்...

எ ல்.எம்.நஜீப்தீன் (வயது44) என பொலிஸார் தெரிவித்தனர். தமிழ்-முஸ்லிம் மக்களிடையே வன்முறைகளை தூண்டும்தீய சக்திகளின் பின்னணியிலேயே இச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளி யிடப்பட்டது. (ச-7)

### யுத்த அச்சுறுத்தலை தடுக்கும்...

மிகப்பழமையான நாடாகவும் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாகவும் இலங்கை இருந்து வருகிறது. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையேயான 20 வருட காலப் போரினால் 64 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உள் நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதன் பின்னர் மிக மோசமான இரத்தம் தோய்ந்த மாதமாக 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாறியது. அரசபடையினருக்கு எதிரான தொடர்ச்சியான கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல்களும் தற்கொலைத் தாக்குதல்களும் விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டன.

இலங்கை யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் தொடர்பாகவும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் அமெரிக்கா கவலை கொள்கின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண காலக்கெடு விதித்தும் தீர்வுகாணாவிட்டால் சுயநிர்ணயப் போராட்டத்தை தீவிரப்படுத்தவுள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அண்மையில் அறிவித்திருந்தார்.

ஜெனீவாவில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கான பேச்சுக்கள் பெப்பிரவரி 22 ஆம் திகதி தொடங்குகிறது. அமைதிப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றாலும் மீண்டும் ஆயுதப்போராட்டம் தொடங்கப்படும் சூழ்நிலையானது பாரிய அச்சுறுத்தலாகும். ஆகையால் அதற்குத் தீர்வுகாண வேண்டும்.

ஆயுதப் போராட்டம் மீண்டும் தொடங்குவதைத் தடுக்க அமைதிப்பேச்சுக்களில் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டுமென அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### ஜெனீவா நேரடிப்...

முக்கிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மகிந்த நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சமாதானச் செயற்பாடுகளின் மூலம் சகல சமூகங்களுக்கும் கௌரவமான சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமென ஜனாதிபதி தெரிவித்தார்.

இந் நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களை சமாதானச் செயற்பாடுகளில் பங்காளிகளாகவும் பயனாளிகளாகவும் அரசாங்கம் கருதுகின்றது.

சகல முஸ்லிம் கட்சிகளின் பூரண இணக்கப்பாட்டுடன் தகுதி வாய்ந்த பிரதிநிதி ஒருவரை பிரேரிக்குமாறும் ஜனாதிபதி முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பில் கோரிக்கை விடுத்ததாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பேச்சில் பங்கு கொள்ளும் பிரதிநிதியை தெரிவு செய்வதில் முஸ்லிம் கட்சிகளிடையே இழுபறி நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் தலைவர் ரவூப் ஹக்கீமே பேச்சில் பங்கேற்கக் கூடுமென நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-4)

### திட்டமிடல்...

பணிப்பாளர் றஞ்சன் மற்றும் மாறன் ஆகியோரும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இச் சந்திப்பின் போது சுனாமிக் கட்டமைப்புக்கள் மற்றும் இன்னும் சரியாக புனர்வாழ்வளிக்க முடியாத நிலையில் உள்ள தமிழீழத்தின் கரையோரப் பகுதிகளின் புனரமைப்புப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (ச-4)


## மரண அறிவித்தல்



### லோறன்ஸ் அலக்ஸ்சாண்டர் (சம்மாட்டி)

(பிரபல தொழிலதிபர்)

(Hotel Imperial Bampalapittya, Passion Pafric main street, Colombo, Farm fax Wellawatta, Mundel Restorent Puttalam, Newton Whine Shop Jaffna, No. I Bar K.K.S Road Jaffna A.J.M Tex Jaffna. நிறுவனங்களின் உரிமையாளர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 15/4 Vajira Road, Bampalapittya வசிப்பிடமாகவும் கொண்ட லோறன்ஸ் அலக்ஸ்சாண்டர் 10.02.2006 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சலமோன் லோறன்ஸ் பாக்கியம் தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற அருளப்பு உலுவிசம்மா தம்பதிகளின் மருமகனும், மேரி மெற்ரல்டாவின் (பிறேமா) அன்புக் கணவரும், அலக்ஸ் நியூட்டன்(லண்டன்), நிக்சன், நிரூபன், நிசான், லக்சணா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வமாணிக்கம்(யோசப்), A.J.M Tex, மரியதாஸ் (லண்டன்), உத்தமசீலி(பிரான்ஸ்), ஞானதேவி(நீர்கொழும்பு), ஜெயசீலி(இத்தாலி), அமலசீலி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருள்மேரி, லீமாறோஸ், அந்தோனி பர்ணாந்து, காலஞ் சென்ற செபஸ்ரியம்பிள்ளை மற்றும் ஜோன் ஜோச், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

யாவில் லேன்,<br>ஆனைக்கோட்டை.

தகவல்,<br>யோசப் (A.J.M Tex)

(159)

## திருமண வாழ்த்து

மாலி – மதுறிகா

இன்று லண்டன் மாநகரில் திருமண வாழ்வில் ஒன்றிணையும்

துரைசிங்கம் மாலி-பிறேமாகரன் மதுறிகா

தம்பதியினர்

இல்லறமென்னும் நல்லறத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று பல்லாண்டு காலம் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

11.02.2006 — வலம்புரி நண்பர்கள்



## திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்

### வருடாந்த மகோற்சவம்

கொடியேற்றம்-12.02.2006 -ஞாயிற்றுக்கிழமை காலை 11.00<br>
10ஆம் திருவிழா-21.02.2006 செவ்வாய்க்கிழமை மஞ்சம்<br>
14ஆம் திருவிழா-25.02.2006 சனிக்கிழமை சப்பறம்<br>
15ஆம் திருவிழா-26.02.2006 ஞாயிற்றுக்கிழமை தேர்<br>
16ஆம் திருவிழா-27.02.2006 திங்கட்கிழமை தீர்த்தம்<br>
28.02.2006 பகல் மகேஸ்வர பூஜையும் இரவு தண்டிகை<br>
29.02.2006 மாலை வயிரவர் உற்சவம் நடைபெறும்

விளம்பர அன்பளிப்பு:-<br>
ஹரன் புடவையகம், பலாலிவீதி, திருநெல்வேலி.











இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 11.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.